வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959    Reg. No. : P. 1632    விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com    மலர் : 06    29.03.2025 சனிக்கிழமை    இதழ் : 90    பக்கங்கள் : 12

### மனித உரிமைகள் மீறல்:

# இராணுவத்தினரானாலும் தண்டிக்கப்பட வேண்டும்!

## போர் கால தளபதி சரத் பொன்சேகா

- சவேந்திர சில்வா தவறு இழைக்கவில்லையாம்
- ஜகத் ஜெயசூரிய மீது விசாரணை நடத்தினாராம்



கொழும்பு, மார்ச் 29

**"மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்டிருந்தால் இராணுவத்தினராக இருந்தாலும் தண்டிக்கப்பட்டே ஆகவேண்டும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை", - இவ்வாறு வன்னி இறுதிப் போரை வழிநடத்திய இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறியுள்ளார்.**

அத்துடன், இவ்வாறான குற்றச்சாட்டுகள் தொடர்பில் தான் இராணுவத் தளபதியாக இருந்த காலத்திலேயே ஜகத் ஜெயசூரியவுக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பித்திருந்தார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் முன்னாள் படை தளபதிகள் மற்றும் கருணா உள்ளிட்ட நால்வருக்கு பிரிட்டன் விதித்த தடை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், "ஜகத் ஜெயசூரிய, வசந்த கரன்னகொட ஆகியோர் போர்க் களத்தின் முன்வரிசையில் நின்று போரிட்டவர்கள் அல்லர். பின்வரிசையில் நின்றவர்கள். போர்க் களத்தின் பின்வரிசையில் ஏதேனும் தவறுகள் நிகழ்ந்திருந்தால் அவை விசாரிக்கப்படவேண்டும்.

"நான் இராணுவத் தளபதியாக இருந்த காலத்திலேயே ஜகத் ஜெயசூரியவுக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பித்திருந்தேன். 11

## இந்திய பிரதமரின் இலங்கை பயணம் அறிவிக்கப்பட்டது!

### அஜித் டோவலும் வருகிறார்



புதுடில்லி, மார்ச் 29

எதிர்வரும் ஏப்ரல் 4ஆம் திகதி இலங்கைக்கு வரும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி 6ஆம் திகதி வரை தங்கியிருப்பார் என்று இந்திய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்திய பிரதமரின் தாய்லாந்து, இலங்கை பயணம் குறித்து அந்த அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

பிம்ஸ்ரெக் மாநாட்டுக்காக ஏப்ரல் 3ஆம் திகதி தாய்லாந்து செல்லும் இந்திய பிரதமர் மோடி, அங்கிருந்தே ஏப்ரல் 4ஆம் திகதி இலங்கைக்கு வருவார். 11

## வடக்கில் அதிக வெப்பநிலை; அவதானமாக செயல்படுங்கள்!

### மக்களுக்கு அறிவுறுத்து

கொழும்பு, மார்ச் 29

வடக்கு மாகாணம் மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளில் அதிக வெப்பம் நிலவுகிறது. இது விடயத்தில் பொதுமக்கள் அவதானமாக செயல்பட வேண்டும் என்று வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அந்த அமைப்பு அதில், வடக்கு, வடமத்திய, வடமேற்கு, சப்ரகமுவ 11

## இலங்கையை குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்தும் தீர்மானம் அவசியம்!

### தமிழரின் எதிர்பார்ப்பு இதுவே என்கிறார் ருத்திரகுமாரன்

நியூயோர்க், மார்ச் 29

இனப்படுகொலை, மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், போர் குற்றங்களுக்காக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தும் தீர்மானத்தை மனித உரிமைகள் பேரவையில் பிரிட்டன் கொண்டுவரவேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர் - இவ்வாறு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. ருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முன்னாள் படைத் தளபதிகள் மற்றும் கருணா உட்பட நால்வருக்கு கடந்த திங்கட்கிழமை பிரிட்டன் தடை விதித்தது. இதனை வரவேற்று அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும், ஆயுத மோதலின்போது தமிழர்களுக்கு 11

## தையிட்டி திஸ்ஸ விகாரையில் கைவைக்க நினைக்காதீர்கள்!

### இப்படி எச்சரிக்கிறார் விமல் வீரவன்ஸ



கொழும்பு, மார்ச் 29

"பௌத்தர்களின் புராண கால விகாரையான தையிட்டி விகாரைமீது கைவைக்க நினைக்க வேண்டாம். தையிட்டி திஸ்ஸ விகாரைமீது கை வைப்பதற்கு ஜனாதிபதி உட்பட யாருக்கும் உரிமை இல்லை", இப்படி எச்சரித்துள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ஸ.

கொழும்பில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் 11

## பாலியல் குற்ற சந்தேகநபர் அடையாளம் காட்டப்பட்டார்!

கொழும்பு, மார்ச் 29

அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் பெண் மருத்துவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தின் குற்ற சந்தேகநபர் அடையாளம் காட்டப்பட்டார்.

அநுராதபுரம் தலைமை நீதிவான் நாலக சஞ்சீவ முன்னிலையில் அவரின் இல்லத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பிலேயே பாதிக்கப்பட்ட பெண் மருத்துவர் குற்ற சந்தேகநரை அடையாளம் காட்டினார்.

கடந்த 10ஆம் திகதி, அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் மருத்துவரின் விடுதிக்குள் புகுந்த படைவிட்டோடி சிப்பாய்பெண் மருத்துவர் ஒருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியிருந்தார்.

இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் 11



**மியன்மாரில் நிலநடுக்கம் 144இற்கும் மேற்பட்டோர் பலி!**

சீனா, தாய்லாந்திலும் தாக்கம் உணரப்பட்டது 11

## வேட்புமனுக்கள் நிராகரிப்பு; உயர்நீதிமன்றில் பரிசீலனை

கொழும்பு, மார்ச் 29

உள்ளூராட்சி சபைகள்தேர்தலுக்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக அரசியல் கட்சிகளால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று வெள்ளிக்கிழமை உயர்நீதிமன்றால் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டன.

விசாரணை முடிவில் சட்டமா அதிபர் தலைமையில் முன்னிலையான சட்டத்தரணியை வழக்கு தாக்கல் செய்த சட்டத்தரணிகளோடும் தேர்தல் ஆணைக்குழுவின் முடிவெடுக்கக் கூடியவர்களோடும் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆக்கபூர்வமான கலந்துரையாடலை நடத்தி சுமுகமான முறையில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய விடயங்களை சமர்ப்பிக்குமாறு 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை நீதிமன்றுக்கு புதிய கட்டடத் தொகுதி!

வடமராட்சி, மார்ச் 29

**பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தை பருத்தித்துறை - மருதங்கேணி வீதியிலுள்ள பல்லப்பை முச்சந்திக்கு அண்மையாக நிர்மாணிக்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது என்று பருத்தித்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.**

புதன்கிழமை நடந்த இந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் ஜெ. ரஜீவன் எம். பி. தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தை புதிய இடத்தில் நிர்மாணிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. நீதிமன்ற வளாகம் அமைப்பதற்காக 4 ஏக்கர் அரச காணி அங்கு இனங்காணப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை, நீதிமன்ற வளாகத்தை அமைக்க 20 கோடி ரூபாயை முதல் கட்டமாக நீதி அமைச்சு கடந்த வருடம் ஒதுக்கியமையும் சுட்டிக் காட்டப்பட்டது.


இதேபோன்று, அல்வாய் நாவலடி சந்தி - திக்கம் கிராம வீதியில் வீதியின் நடுவே அமைந்துள்ள இராணுவ முகாமை அகற்றுமாறு பொது மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த இராணுவ அதிகாரி, “படை முகாம்கள் அமைந்துள்ள காணிகளை விடுவிப்பதற்கு என இராணுவ பிரிவில் ஒரு சபை இருக்கிறது. இந்தக் கோரிக்கையை அந்த சபைக்கு தெரிவிக்கிறேன்”, என்று கூறினார்.

இதைத் தொடர்ந்து, கூட்டத்தில் பங்கேற்ற ரஜீவன், அர்ச்சுனா எம். பிக்கள் இந்த விடயம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சருடன் பேசி தீர்வு காண்பதாகத் தெரிவித்தனர்.

மேலும், திக்கம் வடிசாலைக் காணியை அதற்கு பொறுப்பான வடமராட்சி பனை தென்னை வள கொத்தணிச் சங்கத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதுவும் கூட்டத்தால் ஏற்கப்பட்டது.

(ஐ-02)



# கோணாவில் மகா வித்தியாலய மாணவர்களின் முன்னுதாரணம்!

கிளிநொச்சி, மார்ச் 29

கல்வி பொது தராதர சாதாரண பரீட்சைகள் நிறைவடைந்த பிற்பாடு கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலய மாணவர்களின் முன்னுதாரண செயல்பாடுகள் பலரையும் பாராட்ட வைத்துள்ளன.

மாணவ, மாணவிகள் ஒன்று சேர்ந்து தாங்கள் படித்த பாடசாலை சூழலைத் தூய்மைப் படுத்தி பாடசாலை மதிலுக்கு வர்ணம் பூசி மகிழ்ந்தனர்.

பரீட்சை முடிவடைந்த பிற்பாடு பாடசாலை சீருடையில் மை தெளித்து விளையாடும் மாணவர்கள் மத்தியில் கோணாவில் மகா வித்தியாலய மாணவர்களின் முன்னுதாரண செயல்பாட்டையும் அவர்களுக்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களையும் சமூக ஆர்வலர்கள் பாராட்டியுள்ளனர்.

(ஐ)



# ஞானச்சுடர் மலர் வெளியீடும் உதவி திட்டங்கள் வழங்கலும்

வடமராட்சி, மார்ச் 29

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டு பேரவையால் வெளியிடப்படும் ஞானச்சுடர் 327ஆவது மலர் வெளியீடும் வாராந்த உதவி திட்டங்கள் வழங்கும் நிகழ்வும் நேற்று வெள்ளிக்கிழமை ஆசிரமத்தின் முதல்வர் சாதனை தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றன.

மலர் வெளியீட்டைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கப்பட்டன. இதன் பின்னர், உதவித் திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதில், சங்கானை பிரதேச மருத்துவமனையின் நரம்பியல் பிரிவின் பக்கவாத நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கும் இயன் மருத்துவருக்கு வேதனமாக வழங்க 70 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

தந்தை செல்வா தொடக்க நிலை பள்ளியின் பரிசளிப்பு நிகழ்வுக்கு 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான புத்தகங்கள் வழங்கப்பட்டன. இதே போன்று, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையின் தொல்லியல் ஆய்வுக்காக 25 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்பட்டது.

(ஐ)

# வடக்கு, கிழக்கு வதைமுகாம்கள் குறித்து பேச அரசு தயாரில்லை!

## சத்தியலிங்கம் எம். பி. சாடல்

வவுனியா, மார்ச் 29

பட்டலந்த வதைமுகாம் போல பல வதைமுகாம்கள் வடக்கு, கிழக்கில் கடந்த 30 வருடங்களாக இயங்கின. இது தொடர்பில் விசாரிக்க இந்த அரசாங்கம் தயாரில்லை - இவ்வாறு சாடியுள்ளார் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம்.

உள்ளூராட்சி வேட்பாளர் அறிமுக நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், வவுனியா வடக்கு பிரதேசத்துக்கு தண்ணீர் வரவில்லை. ஆனால் மகாவலி எல் வலயம் ஊடாக பல குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் திட்டமிட்ட இன பரம்பலை மாற்றும் செயல்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

இதேபோன்று, செட்டிகுளம் பிரதேசம் கீழ் மல்வத்து ஓயா திட்டத்தின் மூலம் ஆபத்தான நிலையில் உள்ளது. புதிதாக வாக்காளர்கள் இணைக்கப்பட்டுள்ளார்கள். திட்டங்களை நேர்மையாக மக்களுக்காக செயல்படுத்தினால் நல்லது. ஆனால், இவ்வாறான திட்டங்களின் பின்னால் குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன.

வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறலை ஏற்றுக்கொள்ள இந்த அரசாங்கமும் தயாரில்லை. அண்மையில், 4 பேரை பிரித்தானியா தடை செய்தது. அதனை எமது கட்சியும் வரவேற்றுள்ளது.

தற்போதைய அரசாங்கம் இந்தத் தடையை ஒரு தலைப்பட்சமான இந்த முடிவை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று தெரிவித்துள்ளது. பட்டலந்த அறிக்கை பற்றி பேசும் அவர்கள், பல வதை முகாம்கள் வடக்கு, கிழக்கில் இயங்கின. தங்கள் உறவுகளை இராணுவத்தினரிடம் கையளித்தவர்கள் உள்ளனர். அதை விசாரிக்க தயாரில்லை. அதைப் பற்றி பேச அவர்கள் தயாரில்லை - என்றார்.

(ஐ-10)

# ‘சயனைட்’ நாவல் வெளியீடு இன்று

கிளிநொச்சி, மார்ச் 29

தீபச்செல்வன் எழுதிய ‘சயனைட்’ நாவல் வெளியீடு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி நண்பர்கள் விருந்தகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், சிறப்பு விருந்தினர்களாக கந்தையா பாஸ்கரன், திருமதி வெற்றிச்செல்வி ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

(ஐ)

# மாணவியை தண்டித்த ஆசிரியர் கைதானார்!

வடமராட்சி, மார்ச் 29

பாடசாலை மாணவி ஒருவரை தடியால் அடித்த குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறையிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் அறிய வருவதாவது,

தரம் - 05 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு புதன்கிழமை பாடசாலை ஆசிரியரால் பரீட்சை நடத்தப்பட்டுள்ளது. பரீட்சையின் பின்னர், வினாத்தாளை மாணவர்களிடையே பரிமாறி , அதனை மாணவர்களையே திருத்துமாறு ஆசிரியர் அறிவுறுத்தியுள்ளார்.

இதையடுத்து, மாணவர்கள் தமக்குள் வினாத்தாளை பரிமாறி திருத்தியபோது, அடி வாங்கினார் என்று கூறப்படும் மாணவி, தனது வினாத்தாளை திருத்திய மாணவிக்கு பிழையான விடைகளை சரியாக எழுதித் திருத்துமாறு கூறியுள்ளார். அந்த மாணவியும் அதனை செய்துள்ளார்.

இதனை அவதானித்த ஆசிரியர் இரு மாணவிகளையும் அழைத்து கடுமையாக எச்சரித்ததுடன், அவர்களை தடியால் அடித்து தண்டித்துமுள்ளார்.

விடைகளை சரியாக எழுத கூறிய மாணவி வீட்டுக்குச் சென்று ஆசிரியர் அடித்த விடயத்தை கூறியுள்ளார். இதையடுத்து, மாணவியின் தாயார் மாணவியை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் சிகிச்சையளிக்குமளவுக்கு பாதிப்பு எதுவுமில்லை என்று கூறியுள்ளனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் மாணவியின் தாயார் ஆசிரியருக்கு எதிராக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதையடுத்து, விசாரணைக்காக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்ட ஆசிரியர் விசாரணை முடிவில் கைது செய்யப்பட்டார்.

ஆசிரியர் கைது செய்யப்பட்டமையை அடுத்து பருத்தித்துறை பொலிஸ் நிலையம் முன்பாக ஆசிரியருக்கு ஆதரவாக மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் திரண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# பழுதடைந்த அரிசி விற்றவருக்கு 35 ஆயிரம் ரூபாய் அபராதம்!



முல்லைத்தீவு, மார்ச் 29

பழுதடைந்த அரிசி மற்றும் காலாவதியான பொருட்களை விற்பனை செய்த உரிமையாளருக்கு 35 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது முல்லைத்தீவு மேலதிக நீதிவான் நீதிமன்றம்.

புதுக்குடியிருப்பு - வள்ளிபுனத்தில் வணிக நிலையம் ஒன்றில் காலாவதியான பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன என்று மக்களால் முறைப்பாடு அளிக்கப்பட்டது. இதையடுத்து, கடந்த 22ஆம் திகதி பொது சுகாதார பரிசோதகர் குழு அந்தக் கடையில் சோதனை நடத்தியது.

இதன்போது, அங்கிருந்து 700 கிலோ பழுதடைந்த அரிசி மற்றும் பிஸ்கெற் பைக்கெற்றுகள் கைப்பற்றப்பட்டன. இதையடுத்து, விற்பனையாளருக்கு எதிராக முல்லைத்தீவு மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. இதில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட உரிமையாளருக்கு 35 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்ததுடன், அவரை கடுமையாக எச்சரித்து விடுவித்தார் நீதிவான்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
29.03.2025 சனிக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 15

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழ் கட்சிகளின் தவிப்பு

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் அறிக்கைகள் ஒரு விடயத்தைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. அதாவது, மீண்டும் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து வரலாற்றுத் தவறை இழைத்துவிடாதீர்கள் என்று தமிழ்க் கட்சிகள் தமிழ் மக்களிடம் கெஞ்சும் நிலைக்கு கீழிறங்கியிருக்கின்றன.

இதுவரையில் அனைத்துக் கட்சிகளையும் இரண்டாந்தரமாகப் பேசி வந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏனைய கட்சிகள் சிலவற்றை இணைத்துக் கொண்டு கூட்டாகத் தேர்தலை எதிர்கொள்கிறது. பிரதான கட்சி மனோநிலையில் இருக்கின்ற இலங்கை தமிழ் அரசு கட்சியும் தமிழ் மக்களை நோக்கி ஆதரவைக் கோரும்போது தேசிய மக்கள் சக்தியை விரல் நீட்டியே பேசுகின்றது.

தமிழ் மக்களை இனி கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். தமிழ் மக்கள் வரலாற்றுத் தவறை இழைத்துவிடக்கூடாது. இதுவே, இறுதி சந்தர்ப்பம் - இப்படியான கதைகளை தமிழ்க் கட்சிகள் கடந்த காலத்திலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறியிருக்கின்றன. நெருக்கடிகளை சமாளிக்க முடியாமல் தடுமாறுகின்றபோது, தமிழ் கட்சிகளுக்கு இவ்வாறான கதைகள் தேவைப்படுகின்றன.

ஆனால், தமிழ் மக்களை நோக்கி வேண்டுகோள்களை முன்வைக்கும் தமிழ்க் கட்சிகள் ஒரு விடயத்தை உணர்ந்து கொள்ள முயற்சித்ததாகத் தெரியவில்லை. இத்தனை தமிழ்க் கட்சிகள் இருக்கின்ற போதிலும் - தமிழ் மக்கள் எதற்காக உங்களைக் கடந்து தென்னிலங்கை கட்சியொன்றை நோக்கிச் சென்றனர்? அவ்வாறானதொரு முடிவை எடுக்குமாறு தமிழ் மக்களைத் தூண்டிய காரணி என்ன?

தமிழ் அரசு கட்சி தவறு என்றால் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியை ஆதரித்திருக்கலாம் அல்லவா! இரண்டு கட்சிகளுமே பிழையென்றால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை ஆதரித்திருக்கலாம் அல்லவா!! ஆனால், தமிழ் மக்களோ இவை அனைத்தையும் விடுத்து - ஏன் தேசிய மக்கள் சக்தியின் பக்கமாக சென்றனர்? அதிலும் குறிப்பாக, அரசியலில் பழுத்த அனுபவசாலிகள் என்போர் அனைவரையும் சாதாரணமாகப் புறந்தள்ளிவிட்டு ஏன் அரசியலோடு பரீட்சயமே இல்லாதவர்களைத் தெரிவு செய்தனர்? தமிழ் மக்கள் தெரிவு செய்திருக்கும் பலரின் தகுதிநிலை கேள்விக்கு உரியது. அதற்கு மக்களே தற்போது சாட்சியாக இருக்கின்றனர். தங்களின் தவறுகளுக்கு அவர்களே பார்வையாளராகவும் இருக்கின்றனர்.

தமிழ்க் கட்சிகள்மீது ஏற்பட்ட வெறுப்பும் ஆவேசமும்தான் தேசிய மக்கள் சக்தியின் வெற்றி. தமிழ்க் கட்சிகள் இதனைப் புரிந்து கொண்டால்தான் மக்களைப் புரிந்துகொள்ள முடியும். உண்மையில், மக்களை நோக்கி கோரிக்கை வைப்பதற்கு பதிலாகத் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் அனைத்தும் முதலில் தங்களை திருத்திக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

# மாணவர்களின் புத்தக பை எடை குறைக்கப்பட வேண்டும்

## கல்வி அமைச்சு மீண்டும் அறிவுறுத்து

கொழும்பு, மார்ச் 29

பாடசாலை மாணவர்களின் புத்தகப் பையின் எடையைக் குறைக்குமாறு பாடசாலைகளுக்கு அறிவுறுத்தப்பட்ட போதிலும், சில பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் அது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என்று கல்வி அமைச்சின் சுகாதாரம் மற்றும் போசாக்கு பிரிவு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சின் சுகாதாரம் மற்றும் போசாக்கு பிரிவின் பணிப்பாளர் கங்கா தில்ஹானி இது தொடர்பில் தெரிவிக்கையில்,

பாடசாலை மாணவர்களின் புத்தகப் பைகளின் எடையை குறைப்பது தொடர்பான அறிவுறுத்தல்கள் சுற்றறிக்கை மூலம் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.


இதனையும் மீறி சில பாடசாலைகளின் அதிபர்களும் ஆசிரியர்களும் அதிகளவான புத்தகங்களை பாடசாலைக்குக் கொண்டு வருமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

பாடசாலை மாணவர்களின் புத்தகப் பைகளின் எடை தொடர்பில் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளின் பிரகாரம் பாடசாலைகளுக்கு கண்காணிப்பு குழுக்களை அனுப்பி புத்தக பைகளின் எடை தொடர்பில் சோதனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பின் பரிந்துரைகளின்படி, பாடசாலை மாணவர்களின் புத்தக பையின் எடை பதினைந்து முதல் இருபது கிலோ அல்லது அதற்கும் குறைவாக இருத்தல் வேண்டும். இதன்படி, முதலாம் தரத்தில் கல்வி கற்கும் மாணவனின் புத்தகப் பையின் எடை 2 கிலோவாகவும், இரண்டாம் தரத்தில் கல்வி கற்கும் மாணவனின் புத்தகப் பையின் எடை 3 கிலோவாகவும், ஐந்தாம் தரத்தில் கல்வி கற்கும் மாணவனின் புத்தகப் பையின் எடை 4 கிலோவாகவும் இருத்தல் வேண்டும்.

10ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவனின் புத்தகப் பையின் எடை 7 கிலோவாக இருத்தல் வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

## திடீரென தீப்பற்றி எரிந்தது பேருந்து!



கொழும்பு, மார்ச் 29

தெற்கு அதிவேக வீதியில் பயணித்துக் கொண்டிருந்த பஸ் ஒன்று திடீரென தீப் பற்றி எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்தத் தீ விபத்து நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றே இவ்வாறு தீப் பற்றி எரிந்தது. இந்தத் தீ விபத்தில் எவருக்கும் எந்த பாதிப்பும் நேரவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தீயணைப்பு படையினர் விரைந்து தீயை கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர். (ஐ)

## கிளிநொச்சி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று நடந்தது!

கிளிநொச்சி, மார்ச் 29

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை மாவட்ட செயலக மாநாட்டு மண் டபத்தில் நடைபெற்றது.

கடற்றொழில் அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது மத்திய மற்றும் மாகாண அமைச்சுகளால் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன. அத்துடன், அவை குறித்து ஆராயப்பட்டன. அத்துடன், கிளிநொச்சியில் இடம்பெறும் பல்வேறு சட்டவிரோத செயல்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பிலும் விசேட திட்டங்களை முன்னெடுப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. (ஐ)

## 20 கிலோ கேரள கஞ்சாவுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது!


கிளிநொச்சி, மார்ச் 29

ஆனையிறவில் 20 கிலோ கஞ்சாவுடன் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி சென்ற கெப் ரக வாகனத்தை பொலிஸார் சோதனையிட்ட போதே இந்த கஞ்சா கைப்பற்றப்பட்டது.

கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக சந்தேக நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். கைதானவர் அம்பாறை - சம்மாந்துறையை சேர்ந்தவர் என்று தெரியவந்துள்ளது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பங்குனி - 29 சனிக்கிழமை**
குரோதி வருடம் - பங்குனி 15
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : அமாவாசை




**மேடம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பயணங்கள் சிறப்பாக அமையும். புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் முக்கியத்துவம் தருவார்கள்.

**இடபம்**
உணர்வுகளை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**மிதுனம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில செலவுகளைக் குறைக்க முடியாமல் திணறுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் விரயம் வரும். அதிகாரிகளை பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**சிம்மம்**
கடினமான காரியங்களை எளிதாக முடிப்பீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

**கன்னி**
சமயோசிதமாகவும், சாதுர்யமாகப் பேசி சாதிப்பீர்கள்.வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர் ஆவார்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித்தருவார். அமோகமான நாள்.

**துலாம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் புதிய சிக்கல்கள் தீரும்.

**விருட்சிகம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**தனுசு**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச் னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தைரியம் கூடும் நாள்.

**மகரம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். அழகும் இளமையும் கூடும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டாகும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே முடிப்பது நல்லது. பிள்ளைகளை அவர்கள் போக்கில் விட்டுப்பிடியுங்கள்.

**மீனம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டு வீர்கள். சக ஊழியருடன் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

# யாழில் கஞ்சா செடி வளர்த்தவர் கைது!

*யாழ்ப்பாணம், மார்ச் 29*

யாழ்ப்பாணத்தில் கஞ்சா செடி வளர்த்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குப்பிளான் - தைலங்கடவை பகுதியில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.



யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, 4 அடி 10 அங்குலம் கொண்ட கஞ்சா செடி மீட்கப்பட்டது.

சந்தேகநபர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# “உள்ளூராட்சி மன்றங்களால் அறவிடப்படும் வரிப்பணம் நிரந்தர வைப்புக்கானது அல்ல”

*வவுனியா, மார்ச் 29*

உள்ளூராட்சி மன்றங்களால் அறவிடப்படும் வரிப்பணம் நிரந்தர வைப்புக்கானது அல்ல. அது மீள மக்கள் நலத் திட்டங்களுக்காக சென்றடைய வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் வவுனியா அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இலங்கை முழுவதும் நடைபெறவுள்ளது. இதில் தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மை பலத்துடன் சபைகளை கைப்பற்றும் என்ற நம்பிக்கை எங்களிடம் இருக்கிறது. பொது மக்கள், புத்திஜீவிகள் ஆகியோருடன் கலந்துரையாடும் போது அவர்களது கருத்துக்களை பெற முடிகிறது. குறிப்பாக வடமாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றுவோம் என்ற எண்ணம் எங்களிடத்தில் உள்ளது.



வன்னி மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றும். மக்களும் அதற்கான ஆதரவை எங்களுக்கு வழங்குவார்கள் என நம்புகின்றோம். கடந்த காலங்களில் உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றிய கட்சிகள் உள்ளூராட்சி மன்றங்களை எவ்வாறு நடத்திச் சென்றார்கள் என்பது கேள்விக் குறியாகவுள்ளது.

வவுனியா மாநகர சபையை கைப்பற்றியவர்கள் பல உட்கட்டமைப்பு வசதிகள், மக்கள் நலத் திட்டங்களை செய்ய வேண்டிய தேவைகள் காணப்பட்ட போதிலும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மக்கள் கஷ்ரப்பட்டு செலுத்தும் வரியை நிரந்தர சேமிப்பில் வைத்து வர்த்தக வங்கிகள் போன்ற செயல்பாட்டை செய்து வந்தமை வேதனைக்குரிய விடயமாகும். அது பிழையான செயல்பாடு.

வரிப்பணமாக அறவிடப்படும் பணம் மீண்டும் மக்களுக்கே சென்றடைய வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம். கடந்த காலங்களில் விடப்பட்ட தவறுகளைத் திருத்தி மக்களது வரிப்பணம், மக்களுக்கே மீளச் சென்று அவர்களது நலத் திட்டங்களை செயல்படுத்தும் வகையில் நாம் அவற்றை பயன்படுத்துவோம்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பில் அறிய முடிகிறது. அது குறித்து நடவடிக்கை எடுப்போம். தேசிய மக்கள் சக்திக்கான ஆதரவு பாராளுமன்றத் தேர்தலை விட அதிகரித்துள்ளது. அடுத்து வரும் 5 வருடங்களில் மக்களாட்சி இடம்பெறும். ஊழல் ஒழிக்கப்படும். ஊழல்கள், மோசடிகள் விசாரிக்கப்பட்டு தண்டனைகள் வழங்கப்படும். இதனை எதிர்காலத்தில மக்கள் காணக் கூடியதாக இருக்கும்”- என்றார். (எ-10)

# விபத்தில் சிக்கிய முதியவர் உயிரிழப்பு

*யாழ்ப்பாணம், மார்ச் 29*

ஓட்டோ மோதி படுகாயமடைந்த முதியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். நீர்வேலி மேற்கு பகுதியைச் சேர்ந்த கந்தசாமி சந்திரராசா (வயது - 72) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த 14ஆம் திகதி அச்சுவேலியிலிருந்து நல்லூர் நோக்கி துவிச்சக்கர வண்டியில் வந்து கொண்டிருந்த வேளை பின்னால் வந்த ஓட்டோ அவரது துவிச்சக்கர வண்டியில் இருந்த ஊன்றுகோல் மீது தட்டியது. இதன்போது, குறித்த முதியவர் வீதியில் விழுந்து படுகாயமடைந்தார்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர் வீடு திரும்பினார். இதன்பின்னர் 26 ஆம் திகதி அவருக்கு மூச்சு எடுப்பதில் சிர மம் ஏற்பட்ட போது மீண்டும் யாழ்ப்பாணம் போதனா மருத் துவமனையில் சேர்க்கப்பட் டார்.

இருப்பினும், அவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (எ-05)

# சிறுப்பிட்டியில் சிறப்புச்சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், மார்ச் 29*

சிறுப்பிட்டி வடக்கு - மாதியந்தனை இலுப்பையடி அருள்மிகு சிறீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு ஆலய பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 02 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 12 ஆம் திகதி சனிக்கிழமை வரை தினமும் மாலை 06.30 மணிக்கு சிவநெறிப் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. அந்தவகையில் சைவப் புலவர்கள் ஏ. அனுசாந்தன், செ. கந்த. சத்தியதாசன், பொன். சந்திரவேல், செ. த. குமரன், க. கைலநாதன் மற்றும் இளஞ்சைவப்புலவர்கள் ச. நவநீதன், நித்திய பாபுதரன், க. கயிலைவாசன், த. வனோஜ்குமார் ஆகியோர்களின் சொற்பொழிவும், சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (எ)

# திலீப் ஜெயவீர எம். பி. தலைமையில் வவுனியாவில் விசேட கலந்துரையாடல்

*வவுனியா, மார்ச் 29*

சர்வஜன அதிகாரம் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலீப் ஜெயவீர நேற்று முன்தினம் வவுனியாவுக்கு வருகை தந்தார். அவரது கட்சியின் ஊடக வவுனியா மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுடன் இதன்போது சந்திப்பில் ஈடுபட்டார். இந்த சந்திப்பு வவுனியாவில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது கட்சி மற்றும் வேட்பாளர்கள் முன்னெடுக்க வேண்டிய செயல்பாடுகள் தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டன.

சர்வஜன அதிகாரம் சார்பில் வவுனியா மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். (எ-10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மருந்து விநியோகஸ்தருக்கு நாட்டில் பெரும் தட்டுப்பாடு



கொழும்பு, மார்ச் 29

நாட்டில் தற்போது 80 வகையான மருந்துகளுக்கான விநியோகஸ்தர்கள் இல்லையென்றும் ஒரேயொரு விநியோகஸ்தர் மட்டுமே தற்போது இருப்பதாகவும் மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

சுகாதார நிபுணர்களின் தேசிய இயக்கம் ஏற்பாடு செய் திருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தற்போது 80 வகையான மருந்துகளுக்கான விநியோகஸ்தர்கள் இல்லை.

இருப்பதோ ஒரேயொரு விநியோகஸ்தர் மட்டுமே என்பதை சுகாதார அமைச்சின் வைத்திய விநி யோகப் பிரிவு ஏற்றுக்கொண் டுள்ளது. அதாவது, தற்போது நாட்டில் மருந்து விநியோக பொறிமுறையும் ஒழுங்குமுறைமையும் பாரிய ஆபத்திலுள்ளது.

துரதிர்ஷ்டவசமாக, இந்தப் பிரச்னைகளைத் தீர்க்கும் முறை தொடர்பில் கணக்காய்வாளர் தொடர்ந்து பரிந்துரைகளை முன்வைத்திருந்தபோதும் இது வரையில் அதிகாரிகள் அதற்கு தயாராக இல்லை என்பது கோப் குழுவில் தெளிவாக அறிவிக்கப்பட்டது.

அதற்கு சிறந்த உதாரணம் சர்ச்சைக்குரிய கண் சொட்டு மருந்தினால் 100-150 வரையான நோயாளர்கள் வாழ்நாள் முழுவதும் மற்றும் தற்காலிக கண் பார்வை பாதிப்புக்குள்ளாகின்றனர். இன்றும் அந்த நிறுவனத்தை தடை செய்வதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை-என்றார். (அ)

# பிரித்தானிய அரசின் இரட்டை நிலைப்பாடு

### சாடுகிறார் வாசுதேவ நாணயக்கார

கொழும்பு, மார்ச் 29

**காஸாவில் இஸ்ரேல் இராணுவம் பாரிய இனப்படுகொலை செய்து வருகிறது. அதற்கு பிரித்தானியா ஆதரவளித்து வரும் நிலையில் 15 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தை அடிப்படையாகக்கொண்டு எமது இராணுவ வீரர்களுக்கு தடை விதிப்பதாக இருந்தால், அது பிரித்தானியாவின் சர்வதேசம் தொடர்பான இரட்டை நிலைப்பாட்டையே காட்டுகிறது. அதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**

கொழும்பில் அமைந்துள்ள ஜனநாயக இடதுசாரி முன்னணி கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டில் பல வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற சிவில் யுத்தத்துக்கு தலைமை தாங்கிய 3 இராணுவத் தளபதிகளுக்கு பிரித்தானியா தடை விதித்திருப்பதன் மூலம் பிரித்தானியாவின் இரட்டை நிலைப்பாட்டையே காட்டுகிறது.

ஏனெனில் காஸாவில் இஸ்ரேல் இராணுவம் அங்கு இனப்படுகொலைகளை மேற் கொள்ள அமெரிக்கா உதவி வருகின்ற போது, அதற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காமல், பிரித்தானியா பல வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் இடம்பெற்ற சிவில் யுத்தத்துக்கு தலைமை தாக்கியமைக்காக எமது இராணுவ வீரர்களுக்கு தடை விதித்திருக்கிறது.



அதேநேரம் பிரித்தானியா இவ்வாறு எமது இராணுவ வீரர்களுக்கு தடை விதித்திருப்பது தொடர்பில் அரசாங்கம் இதுவரை தனது நிலைப்பாட்டை அறிவிக்காமல் இருக்கிறது. அதனால் அரசாங்கம் இதுதொடர்பில் தனது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும்.

அத்துடன் ஜெனிவா மனித உரிமை பேரவையில் இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப் படவேண்டும் என பிரேரணை கொண்டுவந்தபோது முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன அதற்கு இடமளிக்காமல், உள்ளக பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துவதாக தெரிவித்திருந்தனர். அந்த பிரேரணை தற்போதும் செல்லுபடியானதாக இருக்கிறது. அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் அந்த முயற்சியிலேயே இருந்து வருகின்றன. அத்துடன் காஸாவில் இஸ்ரேல் இராணுவம் சிறுவர்கள், பெண்களை கொலை செய்து அங்கு இனப்படுகொலை செய்து வருகிறது.

அதற்கு பிரித்தானியா ஆதரவளித்து வரும் நிலையில் 15 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தை அடிப்படையாகக் கொண்டு தடை விதிப்பதாக இருந்தால், அது பிரித்தானியாவின் சர்வதேசம் தொடர்பான இரட்டை நிலைப்பாடாகும். அதனை நாங்கள் கண்டிக்கிறோம்.

இந்தத் தடை மூலம் எமது நாட்டில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் யுத்தக் குற்றம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என செய்தியையே வழங்கி இருக்கிறது. என்றாலும் எமது நாட்டின் உள்ள விடயங்களில் சர்வதேச சக்திகள் தலையிடுவதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை-என்றார். (அ)

## கைவிட்ட காணியில் கைத்துப்பாக்கி மீட்பு!

கொழும்பு, மார்ச் 29

பதுரலிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெலின்கந்த பகுதியில் கைவிடப்பட்ட காணியிலிருந்து புதைக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு கைத்துப்பாக்கியும், 05 தோட்டாக்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

களுத்துறை மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது .

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கு களுத்துறை மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறனர்.

(அ)

## பிரிட்டனுக்கு எதிராக கை உயர்த்த முதுகெலும்பு இல்லாத அநுர அரசு!

### உதய கம்மன்பில விசனம்

கொழும்பு, மார்ச் 29

இலங்கை இராணுவ வீரர்களுக்கு எதிராக அடிப்படையற்ற குற்றச்சாட்டு முன்வைப்பது தொடர்பில், "தங்களின் தவறை திருத்திக்கொண்டு எங்கள் மீது கைது நீட்டுங்கள்" என்று பிரித்தானிய அரசாங்கத்துக்கு அறிவிக்குமளவுக்கு எமது அரசாங்கத்துக்கு முதுகெலும்பு இல்லாமை நாடென்ற அடிப்படையில் வெட்கப்படக்கூடிய விடயமாகும் என்று பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சர்வசன அதிகாரம் கூட்டணியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பிரித்தானிய அரசாங்கத்தினால் தமிழ்ப் பிரிவினைவாதிகளின் வாக்கு வங்கியை இலக்கு வைத்து எமது இராணுவ வீரர்கள் மூவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள தடையுத்தரவு தொடர்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் எந்தவொரு அடிப்படையுமில்லாத கருத்தை முன்வைத்திருக்கிறார். பிரித்தானியா ஏகமனதான அறிவிப்பையே விடுத்துள்ளதாக அவர் கூறுகிறார். அதில் புதிதாக கூறுவதற்கு ஒன்றும்இல்லை. இலங்கை அரசாங்கத்துடனான இணக்கப்பாட்டுடனான ஒன்றிணைந்த தீர்மானமென்று பிரித்தானியா வெளியிட்டுள்ள அறிவிப்பில் எந்தவொரு இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

அதேபோன்று, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கூறுவதன் அடிப்படையில் பார்த்தால், இந்தத் தீர்மானத்தினால் இலங்கையின் சமாதான செயற்பாடுகள் தொடர்ந்து குழப்ப நிலைக்குள்ளாகும் என்பது உறுதியாகத் தெரிகிறது. பிரித்தானியா இதுபோன்று பயங்கரமான முறையில் எமது இராணுவத்தினருக்கு குற்றச்சாட்டு முன் வைக்கும்போது எமது அரசாங்கத்தின் தரப்பிலிருந்து இதனைவிட சிறந்த பதிலடி வெளிவருமென்றே எதிர்பார்த்தோம்.

எமது இராணுவ வீரர்கள் நாட்டுக்காகவே போர்க்களத்துக்குச் சென்றார்கள். அரசாங்கத்தின் முப்படைத் தளபதியின் கட்டளைக்கமையவே போர்க்களத்துக்குச் சென்றார்களே தவிர அவர்களின் தனிப்பட்ட விருப்பத்துக்காகச் செல்லவில்லை. அதனால், எமது இராணுவ வீரர்களை பாதுகாப்பதற்கான கருத்துகளை முன்வைப்பதற்கான பொறுப்பும் கடமையும் இலங்கை அரசாங்கத்துக்கு இருக்கிறது.

எனவே, இது தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாடு எங்களுக்கோ அல்லது உலகத்துக்கோ அவசியமில்லை. அதேபோன்று தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடும் எங்களுக்கோ அல்லது உலகத்துக்கோ அவசிய மில்லை. இருந்தபோதும் இராணுவ வீரர்களை போர்க்களத்துக்கு தள்ளிய இலங்கை அரசாங்கம் இது தொடர்பில் முன்வைக்கும் கருத்தை முழு உலகமும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது-என்றார். (அ)

## இலங்கைப் படைகளுக்கு ஒரு நீதி இஸ்ரேலுக்கு இன்னொரு நீதியா?

### கேள்வி எழுப்புகிறார் ராஜித

கொழும்பு, மார்ச் 29

இலங்கையில் இடம்பெற்ற 30 ஆண்டு கால கொடூர யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வந்த, முன்னாள் படை வீரர்களுக்கு எதிராக பிரித்தானியா தடை விதித்துள்ளது. ஆனால் அப்பாவி பலஸ்தீனியர்களை கொன்று குவிக்கும் இஸ்ரேல் இராணுவத்துக்கு பிரித்தானியா ஆதரவளித்து வருகிறது. அவ்வாறெனில் இலங்கை இராணுவத்துக்கொரு நீதி, இஸ்ரேல் இராணுவத்துக்கு இன்னொரு நீதியா என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கேள்வியெழுப்பினார்.

களுத்துறையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-30 ஆண்டு கால கொடூர யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வந்த முன்னாள் படை வீரர்களுக்கு எதிராக பிரித்தானியா தடை விதித்துள்ளது. இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளதென்றால், காஸாவிலுள்ள அப்பாவி மக்களை இஸ்ரேல் கொன்று குவிப்பது மனித உரிமை இல்லையா என்று பிரித்தானியிடம் கேட்கின்றேன். இஸ்ரேல் படைவீரர்களுக்கும் அரச தலைவர்களுக்கும் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன?

காஸாவில் சுமார் 50 000 இற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 70 வீதமானோர் பெண்கள் மற்றும் சிறுவர்களாவர். இவ்வாறு அராஜகத்தில் ஈடுபடும் இஸ்ரேல் இராணுவத்துக்காக பிரித்தானியா ஒரு பில்லியனுக்கும் அதிக உதவிகளை வழங்கியிருக்கிறது.

தமது நாடு பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள நிலையில் மக்களுக்கு நிவாரணத்தை வழங்காது இஸ்ரேல் இராணுவத்துக்கு உதவிக் கொண்டிருக்கும் பிரித்தானியாவே இவ்வாறு எமது படையினருக்கு எதிராக தடை விதித்துள்ளது.

சிறுவர்களையும் பெண்களையும் கொன்று குவிக்கும் இஸ்ரேல் இராணுவத்துக்கு எதிராக விதிக்கப்படாத தடை எதற்காக இலங்கை இராணுவத்துக்கு மாத்திரம் விதிக்கப்படவேண்டும்?-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# இந்தியாவுடன் சேர்ந்து பணியாற்றவேண்டும்!

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 29

இந்துப் பிராந்தியத்தில் மிகப்பெரிய பொருளாதார வளர்ச்சியடைந்த நாடாக ,ந்தியா விளங்குகிறது. நாம் அவர்களுடன் இணைந்து பணியாற்றவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-நாம் நாட்டைச் சுற்றி சுவர் எழுப்பிக்கொண்டிருக்க முடியாது. ஒரு நாடாக திறந்த மனதுடன் இயங்க வேண்டும்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இந்தியாவுக்கு சென்றபோது பல்வேறு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டார். இப்போது அதனைச் செய்யாமல் இருக்க முடியாது.

இந்தியாவின் தென் பகுதியிலுள்ள ஐந்து பிராந்தியங்கள் சக்திமிக்க பொருளாதாரத்தை கொண்டுள்ளன. அவை எமக்கு அருகில் இருப்பதால் நாம் இந்தியாவுடன் தொடர்பைக் கொண்டிருக்கவேண்டியது அவசியமாகும்.

தேர்தல் காலத்தில் எத்தனையோ வாக்குறுதிகளை அரசாங்க தரப்பினர் வழங்கினார்கள். ஆயினும் அவை நிறைவேற்றப்படவில்லை. நிலவிலிருந்து அரிசியை கொண்டுவருதுபோன்று சோடிக்கப்பட்ட பல கதைகள் இருந்தன. இன்று வாழ்க்கைச் செலவை குறைக்கக்கூட முடியாத நிலையில் அரசாங்கம் இயங்கிக்கொண்டிருக்கிறது-என்றார். (அ)

# போதைப்பொருளுடன் இந்தியத் தம்பதி கைது!

கொழும்பு, மார்ச் 29

சுமார் 2 கோடி ரூபாய் பெறுமதியான குஷ் போதைப் பொருளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இந்திய தம்பதி பிற்பகல் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டது.

சுமார் 30 வயதான இந்திய தம்பதி, அவர்களது 6 வயது பிள்ளையுடன் நாட்டுக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தாய்லாந்தின் பாங்கொக்கிலிருந்து சிறிலங்கன் விமானம் மூலம் இந்த தம்பதி இலங்கைக்கு வந்துள்ளது.

அவர்கள் கொண்டு வந்த பயணப் பைகளைச் சோதனை செய்தபோது இரண்டு பயணப் பைகளில் சூட்சுமமாக சொக்லேட் பேப்பர்களில் சுற்றப் பட்ட 2 கிலோ கிராம் குஷ் போதைப்பொருளை சுங்க அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

இந்த போதைப்பொருளில் இருந்து வெளியேறிய மணம் விமான நிலைய வருகை முனையத்தில் பல மணி நேரம் பரவியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இந்தியப் பிரஜைகள் இதற்கு முன்பும் ஒரு முறை நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைக்காக விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகளிடம் தம்பதி ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# பிரசன்ன ரணவீரவின் மனு ஏப்ரல் 28 அன்று அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 29

முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர கைது செய்யப்படுவதை தடுக்க உத்தரவிடக் கோரிய மனுவைத் தொடரலாமா, வேண்டாமா என்பது குறித்த முடிவு எதிர்வரும் ஏப்ரல் 28 அன்று அறிவிக்கப்படும் என்று மேல்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

முன்னாள் அமைச்சரின் மனுவை நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

களனிப் பகுதியில் அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு சொத்து போலிப் பத்திரம் மூலம் விற்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக தாம் கைது செய்யப்படுவதைத் தடுக்க உத்தரவிடக் கோரி ரணவீர இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். (அ)

# மதுபோதையில் வாகனம் ஓட்டிய சாரதி; லைசன்ஸ் வாழ்நாள் முழுவதும் இரத்து!

கொழும்பு, மார்ச் 29

மதுபோதையில் தனியார் பஸ்ஸை ஓட்டியதற்காக, பஸ் சாரதியின் உரிமத்தை வாழ்நாள் முழுவதும் இரத்து செய்ய பாணந்துறை பிரதம நீதிவான் உத்தரவிட்டார் என தெரிவிக்கப்பட்டது.

தீர்ப்பை வெளியிட்ட பாணந்துறை பிரதம நீதிவான் சம்பிகா ராஜபக்ஷ, குற்றம் சாட்டப்பட்டவருக்கு அபராதமும் விதித்தார்.

பாணந்துறையிலிருந்து களுத்துறைக்கு ஒரு தனியார் நிறுவனத்தின் ஊழியர்களை ஏற்றிச் சென்ற குற்றம் சாட்டப்பட்டவர், போக்குவரத்து பொலிஸாரால் சோதனை செய்யப்பட்டார்.

இதன்போது, மதுவின் வாசனை அவர் மீது தொடர்ந்து இருந்ததால் பொலிஸார் அவரை மேலும் விசாரித்தனர். அப்போது அவர் மதுபோதையில் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

சாரதி தனது பயணிகளின் உயிருக்கு ஆபத்தை விளைவித்ததான வாதத்தின் அடிப்படையில், பாணந்துறை பிரதம நீதிவான் அவரது உரிமத்தை இடைநிறுத்தி அபராதம் விதித்தார்.

# தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் திலீப விதாரண இராஜினாமா!

கொழும்பு, மார்ச் 29

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி பாண்டுர திலீப விதாரண அந்த பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளார்.

இது தொடர்பான இராஜினாமா கடிதத்தை அவர் போக்குவரத்து அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் அவர் இராஜினாமா செய்ததற்கான காரணம் இதுவரை வெளியிடப்படவில்லை.

இதேவேளை, அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் கீழ் உள்ள அமைச்சுகளுக்கு சொந்தமான நிறுவனங்களின் தலைவர் பதவியில் இருந்து இராஜினாமா செய்த 3ஆவது நபர் கலாநிதி பாண்டுர திலீப விதாரண ஆவார்.

முன்னதாக, இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் ரமால் சிறிவர்தன மற்றும் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் தலைவர் ருவான் விஜயமுனி ஆகியோர் அந்தப் பதவிகளில் இருந்து இராஜினாமா செய்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# எவராக இருந்தாலும் தராதரம் பாராது விசாரணை நடக்கும்!

## இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு

கொழும்பு, மார்ச் 29

கையூட்டல் பெறுவது தொடர்பில் தற்போது நிலவும் சட்டத்தைக் கடுமையாக்க இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டத்திற்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஊழல் சம்பவத்துடன் தொடர்புடைய எந்தவொரு நபர் குறித்தும் தராதரம் பாராது விசாரணை ஆரம்பிக்கப்படும் என அந்த ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (அ)

# மின் கம்பத்தில் மோதிய வான்!



கொழும்பு, மார்ச் 29

அநுராதபுரம், பதவிய வீதியில் ரம்பகெப்புவெவ சந்திக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

வான் ஒன்று வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மின் கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது வானில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வான் சாரதியின் கவனக் குறைவே இந்த விபத்துக்கு காரணம் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பிரிட்டன் தடை விவகாரம் தொடர்பில் அரசின் பதிலறிக்கை பலவீனமானது!

## கூறுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, மார்ச் 29

பிரிட்டன் தடை விவகாரம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் பலவீனமானதொரு பதிலையே வழங்கியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முன்னாள் வெளிவிவகார பிரதி அமைச்சருமான சட்டத்தரணி அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

இலங்கையின் முன்னாள் படைத்தளபதிகள் மூவர் உட்பட நால்வருக்கு விதிக்கப்பட்ட தடை தொடர்பில் தமது நிலைந்நாட்டை அரசாங்கம், பிரிட்டன் தூதுவருக்கு தெளிவுபடுத்தி இருந்தது.

இந்நிலையிலேயே பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. அதனை விமர்சித்துள்ளார்.

இது தொடர்பில் அஜித் பி பெரேரா கூறியவை வருமாறு,

பிரிட்டனின் தடை தொடர்பில் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் சாதகமான பதில் இல்லை. பொறுப்புக் கூறல் சம்பந்தமாகவும் சர்வதேச தரத்தில் அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்படவில்லை.

ஐரோப்பிய நாடுகளில் தேர்தல்கள் வரவுள்ளன.

எனவே, அரசியல் ரீதியிலான நகர்வுகளுக்காக எதிர்காலத் திலும் தடைகள் வரக்கூடும். எனவே, சர்வதேச நிகழ்ச்சி நிரல் தொடர்பில் நாம்



புத்தி கூர்மை யுடன் செயல்படவேண்டும்.

தற்போதைய அரசாங்கத்தக்கு அனுபவம் இல்லை. தூரநோக்கு சிந்தனை கிடையாது. அரசாங்கத்தில் வெளிவிவகாரம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் செயல்படும் குழு பலவீனமானது. அதனால்தான் வெளிவிவகார அமைச்சு பலவீனமானதொரு பதிலை வழங்கியுள்ளது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரத் பொன்சேகாவுக்கு பிரிட்டன் தடை விதிக்காமை சந்தேகமே!

## கூறுகின்றார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, மார்ச் 29

**விடுதலை புலிகள் அமைப்பை முப்படையினர் இல்லா தொழித்ததால் தான் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உட்பட அரசியல்வாதிகள் வடக்கு மற்றும் கிழக்குக்கு தைரிய மாகச் செல்கிறார்கள். பிரிட்டனின் தடையை வன்மையாகக் கண் டிக்கும் தற்றுணிவு அரசாங்கத்துக்கு கிடையாது. முன்னாள் இரா ணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு பிரிட்டன் தடை விதிக் காமல் இருப்பது சந்தேகத்துக்குரியது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும்,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

பத்தரமுல்லையில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-யுத்த காலத் தில் பாரிய மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித படு கொலைகளில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டி முன்னாள் பாதுகாப்புப் பிரதானிகளான சவேந்திர சில்வா, வசந்த கரன் னகொட மற்றும் ஜகத் ஜயசூ ரிய ஆகியோருக்கு எதிராக பிரித்தானியா தடை விதித் துள்ளது.



அதேபோல் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலகி இராணுவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய கருணா அம்மானுக்கும் தடை விதிக்கப் பட்டுள்ளது. யுத்த காலத்தில் இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகா பதவி வகித்தார்.

அவரது கட்டளைகளையே சவேந்திர சில்வா, ஜகத் ஜயசூரிய ஆகியோர் பதவி நிலை அதிகாரிகள் என்ற அடிப்படையில் செயற்படுத்தினார்கள். அவ்வாறாயின் ஏன் சரத் பொன் சேகாவுக்கு பிரித்தானியா தடை விதிக்கவில்லை.

விடுதலைப் புலிகள் அமைப்பினர் கடல் மார்க்கமாக தப்பிச் செல்வதை அப்போதைய கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொடவே தடுத்தார்.

1815 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் மனித படுகொலைகளை படுமோசமாக நடத்தி, காடுகளை அழித்து பல்லாயிரக்கணக்கான யானைகளை கொன்று,தந்தங்களையும், பெறுமதியான சொத்துக்களையும் கடத்திச் சென்ற பெரிய பிரித்தானியா இன்று மனித உரிமைகள் குறித்து இலங்கைக்கு பாடம் கற்பிக்கிறது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் கொள்கைவாதிகளில் பெருமளவிலானோர் பிரித்தானியாவில் வாழ்கிறார்கள். இவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவே பிரித்தானியா தற்போது இந்தத் தடையை விதித்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் கொள்கையால் ஈர்க்கப்பட்டவர்கள் இன்றும் நாட்டில் உள்ளார்கள்.

பிரித்தானியாவில் தற்போதைய முறையற்ற செயற்பாடு அழிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்புக்கு உயிர்ப்பிக்கும் வகையில் உள்ளது.

ஏனெனில் கடந்த காலங்களில் நாட்டில் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய தரப்பினர் தேசியத்துக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டார்கள். நினைவேந்தல் பகிரங்கமாக அனுஷ்டிக்கப்படுகிறது. பாதுகாப்புத் தரப்பு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

சவேந்திர சில்வா, வசந்த கரன்னகொட, ஜகத் ஜெயசூரிய ஆகியோர் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்ததால் தான் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உட்பட அரசியல்வாதிகள் வடக்குக்கு தைரியமாக செல்கிறார்கள், அரசியல் செய்கிறார்கள்- என்றார். (அ)

---

## நீரில் மூழ்கிய சிப்பாய் மரணம்!

கொழும்பு, மார்ச் 29

திவுல்வெவ ஏரியில் குளிக்கச் சென்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக கப்பல்கொல்லாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்தவர் கேகாலையில் வசிக்கும் இஷான் உதய குமார (வயது-38) என்ற சிப்பாய் ஆவார். அவர் வவுனியாவில் உள்ள பன்பேமடுவ இராணுவ முகாமில் இணைக்கப்பட்டிருந்தார்.

இந்த சிப்பாய், மேலும் மூன்று சிப்பாய்களுடன், அதே இராணுவத் தளத்தில் பணியாற்றும் ஒரு சிப்பாயின் தந்தையின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக கீழ் திவுல்வேவ பகுதியில் உள்ள ஒரு வீட்டுக்கு வந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இறுதிச் சடங்குகளை முடித்துக்கொண்டு இராணுவ முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, கீழ் திவுல்வெவ ஏரியில் குளிக்கச் சென்றிருந்தபோது, அவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

---

## சுகாதார அமைச்சுக்கு முன்பாக போராட்டம் செய்த 27 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 29

நீதிமன்ற உத்தரவை மீறி சுகாதார அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 27 பேரை நேற்று முன் தினம் இரவு மருதானை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பல கோரிக்கைகளை முன் வைத்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்த அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் மதுஷான் சந்திரஜித் உட்பட 27 மாணவர் ஆர்வலர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

அரசு பல்கலைக்கழகங்களில் இருந்து இணை சுகாதார பட்டதுறையில் சேர்க்கக் கோரி மாணவர்கள் தொடர்ச்சியான போராட்டப் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

தனியார் பட்டதாரிகளுக்கு சாதகமாக "சூழ்ச்சி செய்யப்பட்ட தேர்வுத் திட்டம்" என்று அவர்கள் விவரிக்கும் திட்டத்தை இரத்து செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோரினர்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் கூற்றுப்படி, பொலிஸார் போராட்டக்காரர்களை வலுக்கட்டாயமாக அந்த இடத்திலிருந்து வெளியேற்றி நள்ளிரவில் கைது செய்ததாக தெரிவிக்கப்பட்டது.

இலவசக் கல்விக்காக குரல் கொடுக்கும் மாணவர்கள் மீது அரசு அடக்குமுறையை ஏவுவதாகக் குற்றம் சாட்டிய அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கைதுகளைக் கண்டித்தது.

---

## தரமான உணவை நியாயமான விலையில் வழங்க உணவகங்களை நிறுவத் திட்டம்!

கொழும்பு, மார்ச் 29

மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் தரமான, போதியளவான உணவை நியாயமான விலையில் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை செய்துகொடுக்க, நாடளாவிய ரீதியில் புதிய உணவகங்களை நிறுவ அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை, சுகாதார அமைச்சு மற்றும் விவசாய அமைச்சு ஆகியன இணைந்து தற்போது உணவகங்களை நடத்தி வரும் வர்த்தகர்களின் ஆதரவுடன் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, முதலாவது மாதிரி உணவகம் ஏப்ரல் முதலாம் ஆம் திகதி நாரஹேன்பிட்டியில் திறக்கப்படவுள்ளது. இதன் இரண்டாம் கட்டமாக தற்போதுள்ள உணவகங்களின் தரத்தை உயர்த்தும் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை, சுகாதார அமைச்சு மற்றும் விவசாய அமைச்சுக்களின் அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் இது தொடர்பான ஆரம்ப கட்ட கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஆரோக்கியமான உணவுகளை உண்ணும் மக்களின் உரிமையை உறுதிப்படுத்தல், சரியான சுகாதாரத் தரத்திற்கு ஏற்ற உணவைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான சூழலை உருவாக்குதல், நுகர்வோர் நம்பிக்கையை வளர்ப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள், அது தொடர்பில் அரச மற்றும் தனியார் துறைகளின் பங்களிப்பை பெற்றுக்கொள்வது குறித்தும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது. இந்த கலந்துரையாடலில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் கபில பண்டார, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் எஸ்.பி.சி. சுகீஸ்வர, தேசிய உணவு ஊக்குவிப்பு சபை, சுகாதார அமைச்சு மற்றும் விவசாய அமைச்சு ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர். (அ)

---

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் சபாநாயகருடன் சந்திப்பு!

கொழும்பு, மார்ச் 29

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் அண்மையில் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை பாராளுமன்றத்தில் சந்தித்தனர்.

இலங்கை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் புதிய பிரதானி சேவரின் சுபாஸ் இலங்கை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தொடர்பாடல் முகாமையாளர் ருவந்தி ஜயசுந்தர, சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனத்தின் தெற்காசியப் பிரதானி ஜோன் என்ட்விஸ்டல் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிப்பாளர் நாயகம் மஹேஷ் குணசேகர உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர். இலங்கை பாராளுமன்றத்தின் பணியாட் தொகுதியின் பிரதானியும் பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்னவும் இச் சந்திப்பில் கலந்துகொண்டார். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் இலங்கையின் அபிவிருத்திக்கு அதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய பங்களிப்புகள் பற்றி பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் செயலமர்வொன்றை நடத்துவது தொடர்பில் கலந்துரையாடுவது இச்சந்திப்பின் நோக்கமாகும்.

இலங்கையின் தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்காக செயற்படுத்தப்படும் புதிய கொள்கைகள் மற்றும் பத்தாவது பாராளுமன்றத்தின் ஊடாக அடைந்துள்ள புதிய அரசியல் கலாசார வெற்றி தொடர்பிலும் இரு தரப்பினரும் இதன்போது கவனம் செலுத்தினர்.

அத்துடன், இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நெருக்கமான ஆதரவை வழங்குமாறும் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன இதன்போது பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்தார். (அ)

---

## பொலிஸ்மா அதிபர் பதவிக்காக ஏழு பேரின் பெயர் முன்மொழிவு!

கொழும்பு, மார்ச் 29

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவியில் இருந்து நீக்குவதற்கான முன்மொழிவைத் தொடர்ந்து, அந்தப் பதவிக்காக ஏழு சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர்கள் இடையே பனிப்போர் ஆரம்பமாகியுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

அதன்படி தற்போதைய பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, லலித் பத்திநாயக்க, சஞ்சீவ மெதவத்த, ரன்மல் கொடிதுனு, சஞ்சீவ தர்மரத்ன, கித்சிறி ஜெயலத் மற்றும் எம்.ஜி.ஆர் எஸ். தமிந்த ஆகியோர் பொலிஸ் மா அதிபர் பதவிக்கு முன்மொழியப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

மேலும் அடுத்து நியமிக்கப்படவுள்ளவர் இந்த நாட்டின் 37ஆவது பொலிஸ் மா அதிபர் ஆவர்.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டால், ஜனாதிபதி அவரைப் பதவியில் இருந்து நீக்குவார்.

அத்துடன் நியமிக்கப்படும் அடுத்த பொலிஸ் மா அதி பர் ஜனாதிபதியால் அரசியலமைப்பு சபைக்கு பரிந்துரைக்கப்படுவார் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தவொரு வாக்குறுதிகளையும் அரசாங்கம் நிறைவேற்றவில்லை

**அதற்குள் உள்ளூராட்சி அதிகாரமும் தேவையாம்**
**அம்பாறையில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் சாடல்**

காரைதீவு, மார்ச் 29

**கடந்த தேர்தல்களில் வழங்கிய எந்தவொரு வாக்குறுதிகளையும் நிறைவேற்ற முடியாது தத்தளிக்கும் ஓர் அரசாங்கமாக இன்றைய அரசாங்கம் காணப்படுகிறது. அதற்குள் உள்ளூராட்சி அதிகாரமும் தேவையாம் என்று தேசிய மக்கள் சக்தி போட்டியிடுகிறது- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடுமையாக சாடியுள்ளார்.**

அம்பாறையில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுடன் நேற்று முன்தினம் றன்பிம ஹோட்டலில் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"இந்த அரசாங்கத்தின் பொய்ப்பித்தலாட்டங்களையும் ஏமாற்று வேலைகளையும் பொய்யான வாக்குறுதிகளையும் இன்று வீதிக்கு இறங்கும் பொழுது அனைத்து மக்களுடைய வாய்களிலும் கேட்கக் கூடியதாக இருக்கிறது.

மக்களுக்கு உறுதியளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் இருக்கக்கூடிய இவர்கள் தற்பொழுது உள்ளூராட்சி மன்றங்களுக்கான அதிகாரத்தையும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் அதிகாரங்களை கேட்கிறார்களே தவிர அவர்களால் மக்களுக்கு எந்த விதமான நலத்திட்டங்களும் இடம்பெறுவதாக இல்லை.

சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருக்கிறது. அதே நேரத்தில் நீதித்துறைக்கு களங்கம் ஏற்பட்டிருக்கிறது.

நீதிமன்றத்துக்குள் கொலை செய்கிறார்கள். கொலையாளிக்கு உடந்தையாக இருந்த அந்தப் பெண்ணை கூட அவர்களால் தேடிக் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறது. நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட முன்னாள் பொலிஸ்மா



அதிபரை கண்டுபிடிக்க முடியாமல் அவரே அவரது வாகனத்தில் வந்துகொண்டிருக்கிறார்.

அவர் தனக்கு விருப்பமான ஒரு வாகனத்தில் வந்த இறங்குகிறார்.

மக்களுக்கு எந்த விதமான அனுகூலங்களும் இல்லாத அரசாங்கமாக இந்த அரசாங்கம் மாற்றப்பட்டுள்ளது.

இம்முறை ஐக்கிய மக்கள் சக்தியானது முதல் முறையாக இலங்கையில் காணப்படக் கூடிய அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் தனித்துப் போட்டியிடுகிறது"- என்றார். (எ-07)



# பேஸ்புக்கில் வெளிவரும் தகவல் உண்மைக்கு புறம்பானது

**தமிழ் அரசு கட்சி மறுப்பு**

திருகோணமலை, மார்ச் 29

இலங்கை தமிழ் அரசுக் கட்சியால் திருகோணமலை மாநகர சபை முதல்வர் வேட்பாளர், உப்புவெளி பிரதேச சபை மற்றும் வெருகல் பிரதேச சபை தவிசாளர் வேட்பாளர்கள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளதாக முகநூலில் வெளிவரும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலை குச்சவெளி பகுதியின் நாவற்சோலை கிராமத்தில் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு கடந்த 26 ஆம் திகதி நடைபெற்றது. இதன்பின்னர் செய்தியாளர்களிடம் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"அப்படி எந்தவொரு முடிவுகளும் எடுக்கப் படவில்லை. முகநூலில் வெளிவந்ததாக நீங்கள் கூறுவதும் ஒரு போலியான செய்தியாகத் தான் இருக்க வேண்டும். எந்தவொரு சபையினுடைய தலைவரையும் தமிழ் அரசுக் கட்சியோ அல்லது வேறு எந்த கட்சியோ தெரிவு செய்ய இயலாது. தேர்தல் முடிவடைந்த பின்பு அந்த சபையில் தெரிவு செய்யப்பட்ட மொத்த உறுப்பினர்களில் அறைவாசிக்கு மேற்பட்ட உறுப்பினர்களது ஆதரவைப் பெறுபவரே சபைத் தலைவராக உள்ளூராட்சி ஆணையாளரால் நியமிக்கப்படுவார்"- என்றார். (எ)

# கிண்ணியா தள மருத்துவமனையில் ரம்மிய இல்லம் உளநல பிரிவு திறப்பு




திருகோணமலை, மார்ச் 29

திருகோணமலை மாவட்டம், கிண்ணியா தள மருத்துவமனையில் உளநல சிகிச்சைக்காக "ரம்மிய இல்லம்" என்ற பெயரில் பிரிவொன்று கடந்த 26 ஆம் திகதி புதிதாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தப் பிரிவு கிண்ணியா தள மருத்துவமனையின் அத்தியட்சகர் டி. எச். நயானா சந்திரதாஸவால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், கிண்ணியா தள மருத்துவமனையின் உளநலப் பிரிவுக்கான பொறுப்பதிகாரி ஏ. கே. எம். நஸ்மி உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர். (எ)

# மின்சாரப் பொருட்கள் விற்பனை நிலையத்தில் திடீரென தீ விபத்து

வாழைச்சேனை, மார்ச் 29

மட்டக்களப்பு மாவட்டம், வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு பிரதான வீதி மாவடிச்சேனையில் அமைந்துள்ள மின்சாரப் பொருட்கள் விற்பனை நிலையத்தில் பெரும் தீ விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்தத் தீ விபத்துச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் இடம் பெற்றுள்ளது.

தீயைக் கட்டுப்படுத்த ஓட்டமாவடி பிரதேச சபை மற்றும் மட்டக்களப்பு தீ அணைக்கும் படை, பிரதேச சமூக மட்ட அமைப்பினர், பிரதேச இளைஞர்கள் எனப் பலரும் தீவிர முயற்சியில் ஈடுபட்டு தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த நிலையிலும், குறித்த தீ விபத்தில் வர்த்தக நிலையத்திலிருந்த பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் சேதமடைந்தன.



இந்தத் தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப் படவில்லை. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)







திருகோணமலை மாவட்ட விவசாயிகளின் பெரும்போக அறுவடைக்கான 58ஆவது வருட புத்தரசி விழா உப்புவெளி கமநல சேவைகள் நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவில் இஸ்ரேல் அதிரடி தாக்குதல்!

## ஹமாஸ் செய்தித்தொடர்பாளர் உட்பட 38 பேர் பலி

காஸா, மார்ச் 29

**காஸாவில் இஸ்ரேல் நடத்திய அதிரடி தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் அப்தலிப் அல் குவானு உள்ளிட்ட 38 பேர் உயிரிழந்தனர்.**



காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்து பயங்கரத் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலிலிருந்து 251 பேரை பணயக் கைதிகளாக காஸா முனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்திச் சென்றனர்.

இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் அதிரடி தாக்குதல் நடத்தியது. இந்தப் போரில் காஸா முனையில் இதுவரை 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அதேவேளை, பணயக் கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், இராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது. பணயக் கைதிகளில் சிலர் ஹமாஸ் ஆயுதக்குழுவினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டன. இஸ்ரேல் - ஹமாஸ் இடையே கடந்த சில வாரங்களாக போர் நிறுத்தம் அமுலில் இருந்தது.

இந்த நிலையில், போர் நிறுத்த ஒப்பந்தம் தோல்விடைந்ததால் இரு தரப்பும் மீண்டும் தாக்குதலை தொடங்கியுள்ளன. அந்த வகையில் காஸா முனையின் பல்வேறு பகுதிகள் மீது இஸ்ரேல் நேற்று முன்தினம் வான்வழித் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் அப்தலிப் அல் குவானு உட்பட 38 பேர் உயிரிழந்தனர். (எ)

# ஊடுருவல்காரர்கள் மீது இரக்கம் காட்டும் மம்தா

## மக்களவையில் அமித் ஷா குற்றச்சாட்டு

புதுடில்லி, மார்ச் 29

பங்களாதேஷ் ஊடுவல்காரர்கள், ரோஹிங்கியாக்களுக்கு இரக்கம் காட்டி, அவர்களை ஊடுருவச் செய்கிறது மேற்கு வங்க (மம்தா பானர்ஜி) அரசு என்று இந்திய மக்களவையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்தார்.

குடியுரிமை மற்றும் வெளிநாட்டினர் ஊடுவல் குறித்து நேற்று முன்தினம் உரையாற்றிய அமித் ஷா மேலும் கூறுகையில்,

"இந்தியாவின் பாதுகாப்புக்கும், வெளிநாட்டினர்களின் வருகையை கண்காணிப்பதற்கும் கடுமையான குடியுரிமை சட்டங்கள் அவசியம். பங்களாதேஷ் ஊடுருவல்காரர்களுக்கும், ரோஹிங்கியாக்களுக்கும் மேற்குவங்க அரசு இரக்கம் காட்டுகிறது. பங்களாதேஷ் எல்லையில் 450 கிலோ மீற்றர் தூரத்துக்கு வேலி அமைக்க மேற்கு வங்க அரசு நிலம் வழங்காதால், அந்தப்பணி நிலுவையில் உள்ளது. வேலி அமைக்கும் பணிகள் நடைபெறும் போதெல்லாம், ஆளும் கட்சி தொண்டர்கள் அராஜகத்தில் ஈடுபட்டு மத கோஷம் எழுப்புகின்றனர். சட்டவிரோத குடியேறிகளுக்கு அடையாள ஆவணங்களை மேற்கு வங்க அரசு வழங்குகிறது. அவர்கள் ஆதார் அடையாள அட்டை பெற்று டில்லிக்கு வாக்காளர் அடையாள அட்டையுடன் வருகின்றனர். பிடிபட்ட பங்களாதேஷவர்கள் எல்லாம் மேற்கு வங்கத்தின் பர்கனாஸ் மாவட்டத்திலிருந்து ஆதார் அட்டைகளை பெற்றுள்ளனர். மேற்குவங்கத்தில் அடுத்தாண்டு பா.ஜ.க. ஆட்சி அமைக்கும்போது, இப்பிரச்னைக்கு முடிவு கட்டப்படும்"- என்றார். (எ)

# புடின் இறந்த பின்னரே போர் முடிவுக்கு வரும்

## உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி

பாரிஸ், மார்ச் 29

புடின் உயிரிழந்த பின்னர் தான் ரஷ்யா - உக்ரைன் போர் முடிவுக்கு வரும் என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இந்தியா செல்லவுள்ளதாக அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் தெரிவித்துள்ள நிலையில், புடினின் உடல் நிலை குறித்து ஜெலன்ஸ்கி சர்ச்சைக்குரிய வகையில் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் பிரான்ஸில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்த ஜெலன்ஸ்கி, "ரஷ்ய ஜனாதிபதியின் உடல் நிலை மிகவும் மோசமடைந்துள்ளது. எது வேண்டுமானாலும் நடக்கலாம். அவரது காலத்துக்கு பின்னர்தான் ரஷ்யா - உக்ரைன் போர் முடிவுக்கு வரும்"- என்றார். (எ)



# மத்திய அரசு நிதி ஒதுக்காமல் தமிழகத்தை ஓரங்கட்ட முயற்சி

## முதலமைச்சர் ஸ்டாலின் குற்றச்சாட்டு

சென்னை, மார்ச் 29

ஒவ்வொரு திட்டத்திலும் உரிய நிதியை ஒதுக்காமல் அரசியல் பார்வையுடன் தமிழகத்தை மத்திய அரசு ஓரங்கட்ட நினைப்பதாக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தி. மு. க. தொண்டர்களுக்கு நேற்று அவர் எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். "மக்கள் நம்பிக்கையுடன் வழங்கிய ஆட்சியை நாம் நடத்திக் கொண்டிருந்தாலும் நாளொரு போராட்டத்தை முன்னெடுத்தே நம் உரிமைகளைப் பெறக்கூடிய வகையில் மத்திய அரசு தமிழகத்தை ஒவ்வொரு துறையிலும் தொடர்ந்து வஞ்சித்து வருகிறது.



இந்தியாவில் மாநிலத்தில் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களே, தங்களின் நியாயமான உரிமை, மாநில வரியில் உரிய பங்கு கிடைக்க மத்திய பா.ஜ.க. அரசிடம் ஒவ்வொரு நாளும் போராட வேண்டியிருக்கிறது, இந்த நிலையில், 100 நாள் வேலைத்திட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர்களின் வாழ்வு, பா.ஜ.க. ஆட்சியில் அவலமான நிலையில் உள்ளது" என்று மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

வக்பு வாரிய சட்ட திருத்தத்தை எதிர்த்து

# தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றம்

சென்னை, மார்ச் 29

இந்திய மத்திய அரசின் வக்பு வாரிய சட்ட திருத்தத்தை முழுமையாக திரும்பப் பெற வலியுறுத்தி தமிழக சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் கொண்டுவந்த தீர்மானம், அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பா.ஜ.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

பாராளுமன்ற கூட்டு குழு பரிந்துரை செய்தபடி, மத்திய வக்பு வாரிய சட்ட திருத்தத்தை பாராளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்ற மத்திய அரசு தீவிரம் காட்டி வருகிறது.

இந்த நிலையில், தமிழக சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரம் முடிந்த பிறகு, வக்பு சட்ட திருத்தத்தை மத்திய அரசு முழுமையாக திரும்ப பெற வலியுறுத்தும் தீர்மானத்தை ஸ்டாலின் முன்மொழிந்தார். இந்த நிலையில் தி. மு. க., அ. தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (எ)

# செங்கடலில் மூழ்கிய நீர்மூழ்கிக் கப்பல்!

## 6 பேர் பரிதாபமாக பலி

கெய்ரோ, மார்ச் 29

செங்கடலில் 45 சுற்றுலாப்பயணிகளுடன் சென்ற நீர்மூழ்கிக் கப்பல் விபத்துக்குள்ளானதில் 6 பேர் பலியாகினர்.

அவசரகால குழுவினரால் 29 பேரை மீட்க முடிந்தது. சுற்றுலா பகுதியில் உள்ள கடற்கரைகளில் ஒன்றிலிருந்து பயணித்த நீர்மூழ்கிக் கப்பல், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 45 சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்றது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர்மூழ்கிக் கப்பல் மூழ்கியதற்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை.

எகிப்துன் பொருளாதாரத்தில் சுற்றுலா ஒரு முக்கிய துறையாகும், ஆனால், பல சுற்றுலா நிறுவனங்கள் இப்பகுதியில் மோதல்களால் ஏற்படும் ஆபத்துகள் காரணமாக செங்கடலில் பயணிப்பதை நிறுத்திவிட்டன.

# இறக்குமதி வாகனங்களுக்கு அமெரிக்காவில் 25 வீதம் வரி

வாஷிங்டன், மார்ச் 29

அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் வெளிநாட்டு கார்கள் மற்றும் அதன் உதிரிப் பாகங்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று அந்த நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அதிரடியாக அறிவித்துள்ளார். நேற்று முன்தினம் வெள்ளை மாளிகையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ட்ரம்ப் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். "அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படாத எல்லா கார்களுக்கும் 25 வீதம் வரி பொருந்தும்"- என்றார்.

இந்த புதிய உத்தரவு வரும் ஏப்ரல் 3 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ட்ரம்பின் இந்த முடிவு அமெரிக்க உள்நாட்டு வாகனத் தொழிலை மேம்படுத்துவதற்காகவும் உள்ளூர் வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்காகவும் எடுக்கப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை விளக்கமளித்துள்ளது. இதேவேளை கனடா, மெக்சிக்கோ, ஜப்பான், தென் கொரியா, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளிலிருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதியாகும் கார்களின் விலை உயரக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நிக்கோலஸ் பூரன் அதிரடி ஆட்டம்

## சன்ரைசர்ஸை வீழ்த்தி லக்னோ அபார வெற்றி

ஹைதராபாத், மார்ச் 29

ஹைதராபாத் அணியை 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணி அபார வெற்றி பெற்றது.

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 7ஆவது லீக் ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத், லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் மோதின. இந்தப் போட்டியில் நாணயச்சுழற் சியில் வென்ற லக்னோ பந்து வீச்சை தெரிவு செய்தது.

இதையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 190 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக ஹெட் 47 ஓட்டங்களும், அங்கித் வர்மா 36 ஓட்டங்களும், நிதிஷ் ரெட்டி 32 ஓட்டங்களும் எடுத்தனர். லக்னோ தரப்பில் ஷர்துல் தாகூர் அதிகபட்சமாக 4 விக்கெட்களை வீழ்த்தினார்.

இதையடுத்து 191 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற சவாலான இலக்குடன் லக்னோ அணி களமிறங்கியது. தொடக்க வீரர் மார்க்ரம் ஓர் ஓட்டத்தில் ஆட்ட மிழந்தார். ஆனாலும், நிக்கோலஸ் பூரனுடன் ஜோடி சேர்ந்த மிச்சேல் மார்ஷ் 52 ஓட்டங்கள் குவித்தார். அதேவேளை அதிரடியாக விளையாடிய நிக்கோலஸ் பூரன் 26 பந்துகளில் 70 ஓட்டங்கள் குவித்தார்.இறுதியில் 16.1 ஓவரில் 5 விக்கெட்களை இழந்த லக்னோ 193 ஓட்டங்கள் குவித்தது. இதன் மூலம் 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணி அபார வெற்றி பெற்றது. லக்னோ அணியின் டேவிட் மில்லர் 7 பந் துகளில் 13 ஓட்டங்களுடனும், அப்துல் சமத் 8 பந்து களில் 22 ஓட் டங்களுடனும் களத்தில் நின்று அணி யின் வெற்றிக்கு வழிவகுத்தனர். (எ)



## ஸ்வரேவ் வெற்றி

புளோரிடா, மார்ச் 29

மியாமி ஓபின் ரென்னிஸ் தொடரில் ஸ்வரேவ் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இந்தத் தொடர் அமெரிக்காவின் புளோரிடா நகரில் நடைபெற்று வருகிறது.

இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் ஜேர்மனி வீரர் அலெக்ஸ்சாண்டர் ஸ்வரேவ், அவுஸ்திரேலிய வீரர் ஜோர்டான் தாம்சன் ஆகியோர் மோதினர் .

பரபரப்பான இந்த ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்தி சிறப்பாக விளையாடிய ஸ்வரேவ் 7-5, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். இதனால் அவர் காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார். (எ)

## சேப்பாக்கத்தில் சென்னையை வீழ்த்துவது மிகக் கடினமானது

சென்னை, மார்ச் 29

சேப்பாக்கம் மைதானத்தில் சென்னை அணியை வீழ்த்துவது மிகவும் கடினமானது என்று ஷேன் வாட்சன் தெரிவித்துள்ளார்.18ஆவது ஐ.பி.எல். கிரிக் கெட் போட்டி இந்தியா வின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம். ஏ. சிதம்பரம் மைதானத்தில் நேற்று இரவு 8ஆவது லீக் ஆட்டத்தில் 5 முறை சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸை சந்தித்தது.

இந்த நிலையில், சேப்பாக்கத்தில் சென்னை அணியை வீழ்த்துவது மிகவும் கடினம் என்று சென்னை அணியின் முன்னாள் வீரர் ஷேன் வாட்சன் தெரிவித்துள்ளார்.சேப்பாக்கத்துக்கு வரும் பெங்களூரு அணிக்கு மிகப்பெரிய சவால் காத்திருக்கிறது. சென்னையிடம் தரமான சுழற் பந்து வீச்சு உள்ளது. இங்கு, சென்னை அணியின் பலத்தை சமாளிப்பதற்கு ஏற்ப பெங்களூரு அணியினர் தங்களது ஆடும் லெவனில் மாற்றம் செய்ய வேண்டியது அவசியமாகும்.- என்றார். (எ)

மெஸ்சி தலைமையிலான

## ஆர்ஜென்ரீனா அணி இந்தியா செல்கிறது

புதுடில்லி, மார்ச் 29

மெஸ்சி தலைமையிலான ஆர்ஜென்ரீனா அணி, இந்தியாவுக்கு செல்கிறது.

2022ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற மெஸ்சி தலைமையிலான ஆர்ஜென்ரீனா உதைபந்தாட்ட அணி, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இந்தியா செல்கிறது. இந்தியாவில் உதைபந்தாட்டத்தை பிரபலப்படுத்தும் முயற்சியின் ஓர் அங்கமாக செல்லும் ஆர்ஜென்ரீனா அணி, கேரளாவில் கண்காட்சி போட்டியில் விளையாடுகிறது. மெஸ்சி உள்ளிட்ட நட்சத்திர வீரர்கள் இதில் விளையாடுகின்றனர்.

2011ஆம் ஆண்டுக்குப் பிறகு ஆர்ஜென்ரீனா அணி இந்தியாவுக்கு செல்வது இதுவே முதல்முறையாகும்.(எ)

## இறுதிப் போட்டியில் அரினா சபலெங்கா



மியாமி, மார்ச் 29

மியாமி ஓபின் ரென்னிஸ் தொடரில் அரினா சபலெங்கா இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

இந்தத் தொடர் அமெரிக்காவின் புளோரிடா நகரில் நடைபெற்று வருகிறது. இதில் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் அரையிறுதி சுற்று ஆட்டம் ஒன்றில் பெலாரஸின் அரினா சபலெங்கா, இத்தாலி வீராங்கனை ஜஸ்மின் பவுலினியுடன் மோதினார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்தி சிறப்பாக விளையாடிய சபலெங்கா 6-2, 6-2 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். (எ)

## "வீரர்கள் பயமின்றி விளையாட வேண்டும்"

கவுகாத்தி, மார்ச் 29

ரி - 20 கிரிக்கெட் போட்டியில் வீரர்கள் பயமின்றி விளையாட வேண்டும் என்று கொல்கத்தா அணியின் தலைவர் ரஹானே தெரிவித்தார்.

18ஆவது ஐ. பி. எல். தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் அசாம் மாநிலம் கவுகாத்தியில் நடைபெற்ற 6ஆவது லீக் ஆட்டத்தில் முன்னாள் சம்பியன்களான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 151 ஓட்டங்கள் அடித்தது. அதிகபட்சமாக துருவ் ஜூரெல் 33 ஓட்டங்கள் எடுத்தார். கொல்கத்தா தரப்பில் வைபவ் அரோரா, ஹர்ஷித் ராணா, வருண் சக்கரவர்த்தி, மொயின் அலி தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

பின்னர் 152 ஓட்டங்கள் இலக்கை நோக்கி விளையாடிய கொல்கத்தா அணி 17.3 ஓவர்களில் 2 விக்கெட்கள் மட்டும் இழந்து 153 ஓட்டங்கள் சேர்த்து 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அதிகபட்சமாக குயிண்டன் டி கொக் 97 ஓட்டங்கள் அடித்தார்.



இந்த நிலையில் குறித்த போட்டி குறித்து ரஹானே கூறுகையில், "நாங்கள் முதல் 6 ஓவர்களில் சிறப்பாக பந்து வீசினோம். அதேபோன்று, மிடில் ஓவர்களிலும் எங்களது அணியின் சுழற்பந்து வீச்சாளர்கள் மிகச்சிறப்பாக செயல்பட்டனர். குறிப்பாக மொயின் அலி தனக்கு கிடைத்த வாய்ப்பில் அசத்திவிட்டார். இந்த வடிவத்தில் வீரர்கள் பயமின்றி விளையாட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

அதற்கு அனைத்து வீரர்களுக்கும் முழுமையான சுதந்திரத்தை வழங்கியுள்ளோம்"- என்றார். (எ)

## அரையிறுதி சுற்றுக்கு ஜெசிகா முன்னேற்றம்

மியாமி, மார்ச் 29

மியாமி ஓபின் ரென்னிஸ் தொடரில் ஜெசிகா பெகுலா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இந்த ரென்னிஸ் தொடர் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா, இங்கிலாந்தின் எம்மா ராடுகானுடன் மோதினார்.




விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதல் இரு செட்களை ஆளுக்கொன்றாக கைப்பற்றிய நிலையில் 3ஆவது செட்டை பெகுலா கைப் பற்றி வெற்றி பெற்றார். இந்த ஆட்டத்தில் 6-4, 6-7 மற்றும் 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்ற பெகுலா அரையிறுதிக்கு முன்னேறி அசத்தியுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மியன்மாரில் நிலநடுக்கம்...













மியன்மாரில் ஏற்பட்ட இரு சக்தி வாய்ந்த நிலநடுக்கங்களால் 144இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். 732 பேர் காயமடைந்துள்ளனர் என்று சர்வ தேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

மியன்மாரில் நேற்று வெள்ளிக் கிழமை முற்பகல் 11.50 மணியளவில் (உள்ளூர் நேரம்) 7.7 ரிக்டர், 6.4 ரிக்டர் அளவுகளில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் பாதிப்பு அயல் நாடுகளான தாய் லாந்து, சீனாவிலும் உணரப்பட்டது.

இதேநேரம், தாய்லாந்தின் பாங் கொக் நகரில் உணரப்பட்ட நில நடுக்கத்தால் சில உயரமான கட்டடங்கள் சரிந்துவிழுந்தன. இந்த இடிபாடுகளுக் குள் சிக்கி 7 பேர் உயிரிழந்தனர். 81 பேர் காணாமல் போயினர். இதனால், உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று கூறப்படுகின்றது.

இதனிடையே, மியன்மாரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் அந்த நாட்டின் வரலாற்று சிறப்புமிக்க கட்டடங்கள் பலவும் அழிவடைந் துள்ளன. மண்டலே அரண்மனை யும் நில நடுக்கத்தால் தீப்பிடித்தில் சேதமடைந்துள்ளது. அத் துடன், பல புராதன விகாரைகள் மற்றும் கட்டடங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

மியன்மாரில் ஏற்பட்ட நிலநடுக் கத்தால் உட்கட்டமைப்பு வசதிகள் பெரும் பாதிப்பை சந்தித்துள்ளன என்று கூறப்படுகிறது. நிலநடுக்கத்தை அடுத்து மியன்மாரை ஆட்சி செய்துவரும் இரா ணுவ குழு சர்வதேச உதவிக்கு அழைப்பு விடுத்துள்ளது. (ஐ)

# கைதான பல்கலைக்கழக மாணவர்களில் இருவருக்கு மறியல் 25 பேருக்கு பிணை!

கொழும்பு, மார்ச் 29

நீதிமன்ற உத்தரவை மீறி ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்களில் இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். ஏனைய 25 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கை கள் பீட மாணவர் சங்கம் நேற்றுமுன் தினம் சுகாதார அமைச்சின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் மதுஷான் சந்திரஜித் உட்பட பலர் கலந்து கொண்டனர். நீதிமன்ற உத்தரவையும் மீறி சுகாதார அமைச்சு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் மதுஷான் சந்திரஜித் உட்பட 27 பேர் பொலிஸாரால் கைது



செய்யப்பட்டனர்.

இவர்கள் நேற்று நீதிமன்றில் முற் படுத்தப்பட்டபோது மதுஷான் சந்திரஜித் உட்பட இருவரை எதிர்வரும் ஏப்ரல் 4ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. அத்துடன், ஏனைய 25 பேருக்கும் பிணை அனுமதி வழங்கப்பட்டது. (ஐ)

## வடக்கில்...

மாகாணங்களிலும், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலும் சில இடங்களில் வெப்பக் குறியீடு அல்லது மனித உடலால் உணரப்படும் வெப்ப நிலை கவனம் செலுத்தவேண்டிய நிலையை அடைந்துள்ளது.

எனவே, பொதுமக்கள் போதுமா னளவு தண்ணீர் குடிக்க வேண்டும், முடிந்தவரை நிழலான இடங்களில் ஓய் வெடுக்க வேண்டும். வயதானவர்கள் மற் றும் நோய்வாய்ப்பட்டவர்கள் தொடர் பில் கவனம் எடுக்கவும் கடும் உடலு ழைப்பு சார் வேலைகளை குறைக்கவும், வெள்ளை அல்லது வெளிர் நிற ஆடை களை அணியுங்கள் என்றுள்ளது. (ஐ)

## இராணுவத்தினராலும்...

நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் இவர்களில் இருவரை பற்றி பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் விமர்சித்துள்ளேன்.

"இதேபோன்று, போர்க் களத்தின் முன்னரங்கில் நின்று போரிட்ட சவேந் திர சில்வா எதுவித தவறும் செய்ய வில்லை என்று உறுதிபட என்னால் கூறமுடியும்" - என்றும் கூறினார். (ஐ)

## இலங்கையை...

எதிராக அவர்கள் இழைத்த குற்றங்க ளுக்காக இலங்கையின் படை அதிகாரி கள் சவேந்திர சில்வா, ஜகத் ஜெயசூரிய, வசந்த கரன்னாகொட ஆகியோருக்கு எதிரான பிரிட்டனின் தடைகளை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வரவேற் கின்றது.

இந்த தடைகளும் முன்னர் கனடா, அமெரிக்கா ஆகியவை அரசியல் தலை வர்கள், இராணுவத் தளபதிகள் ஆகி யோருக்கு எதிராக அறிவித்த தடை களும் இலங்கை அரசாங்கம் தமிழர் களுக்கு எதிராக பெரும் குற்றங்களை இழைத்தது என்பதை வெளிப்படுத்தி யுள்ளன.

இனப்படுகொலை சமவாயத்தில் கைசாத்திட்டுள்ள நாடுகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னிலை யில் இலங்கைக்கு எதிராக சட்ட நடவ டிக்கையை எடுப்பதற்கு இந்த தடைகள் உதவக்கூடும்.

ஐக்கிய இராச்சியம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் தொடர்ந் தும் தனது தலைமைத்துவத்தை வெளிப்படுத்த வேண்டும். இனப்படு கொலை மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், போர் குற்றங்களுக்காக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தும் தீர்மா னத்தை முன்வைக்கவேண்டும் என தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர் - என்றும் கூறியுள்ளார். (ஐ)

## பாலியல்...

அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. இதைத் தொடர்ந்து சந்தேக நபரை கைது செய்ய 5 பொலிஸ் குழுக் கள் அமைக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட குற்ற சந்தேகநபர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வேட்புமனுக்கள்...

உயர் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

இந்த முடிவின் பின்னர் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி முற்பகல் 10 மணி யளவில் வழக்குகளை மீண்டும் விசார ணைக்கு எடுத்துக் கொள்வது என்றும் உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ஐ)

## இந்திய...

அவருடன், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவ லும் வருவார் என்றும் தெரிவிக்கப் பட்டது.

இலங்கை வரும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோரை சந்தித்துப் பேச்சு நடத்துவார். அத்துடன், அநுராத புரம் மகா போதிக்கும் சென்று வழிபாட் டில் ஈடுபடுவார். இந்திய உதவி திட்டங் களையும் ஆரம்பித்து வைப்பார் என்றும் கூறப்பட்டது. (ஐ)

## தையிட்டி...

தெரிவிக்கையில்,

"தேர்தல் நெருங்கும்போது விகாரைகளுக்கு சென்ற ஜனாதிபதி தன்னை ஒரு பௌத்த ஆதரவாளராக காட்டிக்கொண்டார். ஆனால், மறுபுறம் தையிட்டி விகாரையை சுற்றியிருந்த இராணுவத்தினரை உடனடியாக அங்கி ருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத் தார்.

இலங்கையில் 1818ஆம் ஆண்டு பிரித்தானியாவுக்கு எதிராக பெரும் கலகம் ஏற்படுவதற்கு பிரதான காரணம் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்படாமை ஆகும். இதை மறந்து விடாதீர்கள்.

பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்படாமையால் வெள்ளையர்க ளுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்த னர். தம்புத்தேகமவில் (ஜனாதிபதி அநுரவின் சொந்த இடம்) இருந்து வந்தி ருக்கும் வெள்ளையருக்கு எதிராகவும் அதுவே நடக்கும்.

நீங்கள் செய்த தவறுக்கு புத்த சாச னத்தின் முன் விழுந்து மன்னிப்பு கோருங்கள். நாட்டு மக்களிடமும் மன் னிப்பு கோருங்கள். பௌத்தர்களின் புராண கால விகாரையான தையிட்டி விகாரை மீது கை வைக்க நினைக்க வேண்டாம். தையிட்டி திஸ்ஸ விகாரை மீது கை வைப்பதற்கு ஜனாதிபதி உட் பட யாருக்கும் உரிமை இல்லை" - என் றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கையின் பொருளாதாரம் இன்னும் பாதிப்புற்ற நிலையில்!

## சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 29

**இலங்கையின் பொருளாதார மீட்சி வேகம் பெற்று வருவதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.இலங்கையில் சீர்திருத்தங்கள் பலனளிப்பதாகக் சர்வதேச நாணய நிதியத்தின் தகவல் தொடர்புத்துறையின் பணிப்பாளர் ஜூலி கோசாக் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழு இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் கீழ் மூன்றாவது மதிப்பாய்வை அங்கீகரித்தது.

மேலும் இது நாட்டுக்கு உடனடியாக 334 மில்லியன் டொலர் ஆதரவை அணுக அனுமதித்தது.

எனவே, அந்த மூன்றாவது மதிப்பாய்வை நிதியம் அங்கீகரித்தவுடன், 334 மில்லியன் டொலர் நிதி இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்களை செய்ய வழங்கப்படுகிறது.

இலங்கையில் சீர்திருத்தங்கள் பலனளிக்கின்றன என்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியும்.

பொருளாதார மீட்சி வேகம் அதிகரித்து வருகிறது. இலங்கையில் பண வீக்கம் குறைவாகவே உள்ளது. நிதிப் பக்கத்தில் வருவாய் மேம்பட்டு வருகிறது. சர்வதேச இருப்புக்கள் தொடர்ந்து குவிந்து வருகின்றன.



2024 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி 5 வீதத்தை எட்டியது. அது இரண்டு வருட பொருளாதார சுருக்கத்துக்குப் பிறகு கிடைத்துள்ளது. மேலும் 2025 ஆம் ஆண்டிலும் இலங்கையில் மீட்சி தொடரும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இவை அனைத்தும் இலங்கைக்கும் நாட்டு மக்களுக்கும் மிகவும் சாதகமான முன்னேற்றங்கள்.

எனினும், இவை அனைத்தும் கூறப்பட்டாலும், பொருளாதாரம் இன்னும் பாதிக்கப்படக்கூடியதாகவே உள்ளது.

எனவே பெரிய பொருளாதார நிலைத்தன்மை மற்றும் கடன் நிலைத்தன்மை நீடித்து நிலைத்திருப்பதை உறுதி செய்வதற்கு சீர்திருத்த உந்துதல் நிலைத்திருப்பது மிகவும் முக்கியமானது - என்றார். (அ)

## தேசபந்துவின் நியமனத்துக்கு சஜித்தும் பொறுப்புடையவர்!

### ரணில் தரப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 29

தேசபந்து தென்னக்கோனின் நியமனத்துக்கு சஜித் பிரேமதாசவும் பொறுப்புக்கூற வேண்டுமென ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.



கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் உத்தியோகபூர்வ காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறியுள்ள நிலையில் அதனை மறைப்பதற்கு பல்வேறு அரசியல் நாடகங்களை அரங்கேற்றி வருகிறது.

அதன் அடிப்படையில் தற்போது பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னகோனை பதவியில் இருந்து நீக்குவதற்கு பிரேரணை ஒன்றை சபாநாயகருக்கு கையளித்திருக்கிறது.

ஆனால் இந்த பிரேரணை தொடர்பில் தேடிப்பார்க்காமல், அரசாங்கத்தின் இந்த பிரேரணைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கிறார். எந்த அடிப்படையில் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார் எனத் தெரியாது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அப்போது பொலிஸ்மா அதிபராக இருந்த சி.டி விக்ரமரத்னவின் பதவியை நீடித்து, அதற்காக அரசியலமைப்பு பேரவையின் அனுமதியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தபோது, அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் அவரது பிரதிநிதியுமே தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வந்தார்கள்.

அந்த பின்னணியிலேயே தேஷபந்துவின் வருகை இடம்பெற்றது. அதனால் தேஷபந்துவின் நியமனத்துக்கு சஜித் பிரேமதாஸவும் பொறுப்புக்கூற வேண்டும்- என்றார். (அ)

## காணாமற்போன வாகனங்களை தேடும் நடவடிக்கைகள் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 29

மாகாண சபைகளுக்கு சொந்தமான காணாமற்போன வாகனங்களை தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் பிரதியமைச்சர் ருவான் செனரத் தெரிவித்தார்.

இந்த வாகனங்கள் தொடர்பிலான விசாரணைகளுக்காக குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது- மாகாண சபைகளுக்கு சொந்தமான நிறுவனங்களின் செயற்றிட்டங்களுக்காக வழங்கப்பட்ட வாகனங்கள் சில காணாமற் போயுள்ளதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றதையடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரசுக்கு சொந்தமான வாகனங்களை முறைகேடாக பயன்படுத்திய தனிநபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்-என்றார். (அ)

## தேங்காய் பற்றாக்குறை அடுத்த ஆண்டும் தொடரும்

கொழும்பு, மார்ச் 29

நாடளாவிய ரீதியில் எதிர்வரும் ஆண்டில் தேங்காய் பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்று தேங்காய் ஆராய்ச்சி நிறுவனம் தெரவித்துள்ளது.அதன்படி, எதிர்வரும் ஆண்டு சுமார் 100 மில்லியன் தேங்காய்கள் பற்றாக் குறை ஏற்படக்கூடும் என்று அந்த அமைப்பு மதிப்பிட்டுள்ளது.

நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 3,000 மில்லியன் தேங்காய்கள் தேவைப்படும் நிலையில் தேங்காய் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக, 200 மில்லியன் தேங்காய்களுக்கு சமமான தேங்காய் பால், தேங்காய் துருவல் ஆகியவற்றை மறு ஏற்றுமதிக்காக மூன்று பிரிவுகளின் கீழ் இறக்குமதி செய்ய அனுமதிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் நாட்டில் தேங்காய் உற்பத்தி 32.3 வீதம் கணிசமாகக் குறைந்து 167.8 மில்லியன் தேங்காய்களாகக் குறைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், 2023ஆம் ஆண்டில் நாட்டின் தேங்காய் உற்பத்தி 3,168.1 மில்லியன் தேங்காய்களாக இருந்தது. 2024ஆம் ஆண்டில் தேங்காய் உற்பத்தி 11.9 வீதம் குறைவடைந்து 2790.1 மில்லியன் தேங்காய்களாகக் குறைவடைந்துள்ளது.கடந்த 2024ஆம் ஆண்டு ஒரு தேங்காய் 120 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டதுடன், தற்போது ஒரு தேங்காயின் விலை 220 ரூபாயாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தமிழர்களின் தனித்துவம் பாதுகாக்கப்படவேண்டும்

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

காரைதீவு, மார்ச் 29



தமிழர் தனித்துவம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமே கிடையாது என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சர் மற்றும் தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவாவின் பங்குபற்றுதலுடன் கடந்த 26 ஆம் திகதி மாலை அம்பாறை மாவட்டம் காரைதீவு விபுலானந்தா கலாசார மண்டபத்தில் கடற்றொழிலாளர்களுடன் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது .

இதில், உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள்தான். ஆனால், தமிழர்கள் தமிழர்களாக வாழ வேண்டும். முஸ்லிம்கள் முஸ்லிம்களாக வாழ வேண்டும். சிங்களவர்கள் சிங்களவர்களாக வாழவேண்டும். இதுதான் அழகு.தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் நாடும் மக்களுக்கும் வீழ்ச்சி காண வேண்டியிருக்கும் என்று பய பீதி காட்டினார்கள். ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்கள் நலன் சார்ந்த வேலைகளை அர்ப்பணிப்போடு மேற்கொண்டு வருவது கண்கூடு. இந்த நாட்டு மக்களின் மனங்களை மாத்திரம் அல்ல வெளிநாடுகளின் நம்பிக்கையையும் நாம் வென்றிருக்கின்றோம். ஊழல் - மோசடி அரசியல் செய்தவர்கள் நாட்டை குட்டி சுவராக்கி விட்டு சென்றுள்ளனர். நாங்கள்தான் நாட்டை நிமிர்த்திக் கொண்டிருக்கின்றோம். இலஞ்சம் பெறும் அரசியல் எங்களிடம் இல்லை. வீண் விரயங்கள் மற்றும் செலவுகள் இல்லை.

எமது ஆட்சியில் இலங்கை ரூபாயின் பெறுமதி குறைந்து அமெரிக்க டொலரின் பெறுமதி உச்சம் தொட்டு விடும் என்று பொய் பரப்பினார்கள். அவற்றை பொய்ப்பித்து இருக்கின்றோம். மிக குறுகிய காலத்துக்குள் நாட்டை சீராக நடத்தி கொண்டிருக்கின்றோம். ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் சிந்தனையில் மாணவர்கள், தாய்மார்கள், இளையோர்கள், முதியவர்கள் என்று எல்லோருக்குமான நலன்புரி வேலைத் திட்டங்களையும் எமது அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. சீனா உட்பட உலக நாடுகள் எமது மக்கள் நலன் சார்ந்த வேலைத் திட்டங்களுக்கு பங்களிக்க முன்வந்துள்ளன. மக்கள் நலனே எமக்கு முக்கியம். கடற்றொழில் துறை மேம்படுத்தப்பட வேண்டும். மீனவர்களின் வாழ்வாதாரம் முன்னேற்றம் பெற வேண்டும்.

எதிர்காலச் சந்ததியினருக்கு நாம் மிகச் சிறந்த கடல் வளத்தை கையளிக்க வேண்டும். கடல் வளம் நாசமாக்கப்படுவதையும் சூறையாடப்படுவதையும் அனுமதிக்க முடியாது. சட்டவிரோத மீன்பிடி நாட்டின் எல்லா இடங்களிலும் இடம்பெற்று கொண்டுதான் உள்ளது. சட்டவிரோத மீன்பிடியை முற்றாக இல்லாமல் செய்ய வேண்டும் என்பதில் எமது அரசாங்கம் பற்றுறுதியுடன் உள்ளது. சட்டவிரோத மீன்பிடியை இல்லாமல் செய்வதற்காக புதிய சட்டம் ஒன்றை விரைவில் கொண்டு வருகின்றோம்.

இப்புதிய சட்டத்தின் ஏற்பாடுகளின்படி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு 05 வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட முடியும். இப்பிராந்தியத்தில் உள்ள மீனவர்களின் பிரச்னைகளை நாம் அறிவோம். அவற்றைத் தீர்த்துத்தர என்னால் ஆன நடவடிக்கைகளை மேற்கொள்வேன்- என்றார். (எ-01)

## இளைஞர் சேவைகள் மன்ற ஊழல்; அறிக்கைகள் சட்டமா அதிபருக்கு!

இளைஞர் சேவைகள் மன்றத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மோசடிகள் மற்றும் ஊழல்கள் தொடர் பில் கோப் குழு வெளிப்படுத்திய உண்மைகளின் அடிப் படையில், பாராளுமன்றத்தில் அறிக்கைகளை சமர்ப் பித்த பின்னர், சட்ட நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்க கோப் குழு முடிவு செய்துள் ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், முன்னாள் அமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்த கோப் குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.இரண்டு அறிக்கைகளையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பிறகு, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர தொடர்புடைய அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பப்படும் என்று கோப் குழு உறுப்பினர் பாராளுமன்ற உறுப்பினர் அசித நிரோஷன தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அதிகாரிகளிடம் அண்மையில் நடத்தப்பட்ட விசாரணையின் போது, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் நிறுவனத்தின் நிதியை தவறாகப் பயன்படுத்திய பல சம்பவங்கள் வெளிப்பட்டதாகவும், அதன்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இடைநீக்கம் செய்யப்பட்டதாகவும், அவர்கள் குறித்து நீண்ட விசாரணை நடத்துமாறு இளைஞர் விவகார அமைச்சின் தற்போதைய செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் அசித நிரோஷன தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org